# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு புரட்டாசிமாதம் 18-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 36-ம் இலக்கம்


### சிறியபுஷ்பமாகிய சின்னத்தெரேசம்மாள் படிப்பிக்கும்

## சின்னவழி யாது?

எமதுகாலத்திலே அர்ச்சியசிட்டபட்டஞ் சூட்டப்பட்டவர்களில் யேசுவின்சிறியபுஷ்பம்என்றகாரணப்பெயர்பூண்ட அர்ச். சின்னத்தெரேசம்மாளைப்போலும் உலகம்அடங்கலும் சங்கித்து, நேசித்து, வந்திக்கப்பெற்றுவரும் வேறு ஒருஅர்ச்சியசிட்டரும் இல்லையென்றேசொல்லலாம். ஐரோப்பாவில்மாத்திரமல்ல, ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திறேலியா, உலகின் தீவுதீவாந்தரங்களிலெல்லாம் அவளுடைய தொண்டர்கள் இடையீடில்லாது அவளுடைய சலுகையைத் தேடி வருகின்றார்கள். எங்கள் இந்த இலங்கைத்தீவிலும், இந்தியாவிலும் தெரேசம்மாளின் தொண்டர்கள் பலஆயிரக் கணக்காக உளர். ஆதலால், அவர்களுக்கு அர்ச். சின்னத்தெரேசம்மாளின் விசேஷித்ததொண்டு என்னஎன்பதைப்பற்றி – அதாவது, மனுஷர்மத்தியில் அவள் என்ன அலுவல் செய்துவரவேண்டுமெனத் தேவன் அவளுக்குப் பணித்திருக்கிறார் என்பதைப்பற்றி இரண்டொருகுறிப்புச்சொல்ல எண்ணுகிறோம்.

இந்தப்புண்ணியவதி மரணத்துக்குச் சமீபமாகஇருந்தபோது தன்னைப்போலவே ஒருகார்மேல்சபைக் கன்னியாஸ்திரியாக இருந்த தனதுமூத்தசகோதரியை நோக்கி: "இனிமேல்தான் எனதுவிசேஷ அலுவல் தொடங்கப்போகிறது" என்றாள். அதற்கு அவளின்சகோதரி, "தங்கைச்சி! உனது விசேஷ அலுவல்தான் என்ன?" என்று கேட்டாள். "எனது சின்னவழியை நான் மனுக்குலத்தவர்களுக்குப் படிப்பிப்பதே எனதுவிசேஷஅலுவல்" என்றாள் தெரேசம்மாள். அது என்ன அந்தச்சிறியவழி என்றதற்கு, "பாலியகோல ஞானச்சீவியத்தை" ஆத்துமாக்களுக்குப் படிப்பிப்பதே எனது சிறியவழி" என்று தெரேசம்மாள் விடைகொடுத்தாள். அவளுடைய தொண்டர்களெல்லாரும் அவளுடைய சலுகைகளை விசேஷித்த விதமாக அடையப்பிரியமென்றால், அவள்படிப்பிக்கும் இந்தப் பாலிய கோல ஞான சீவியத்தில் வளரப் பிரயாசப்படவேண்டும். பாலியகோல ஞானச்சீவியமென்றால் என்ன? எங்களுடைய ஞானச்சீவியமானது குழந்தைப் பிள்ளைகளுடைய உலகசீவியத்தின்கோலம் பூண்டிருக்கவேண்டும். குழந்தைப்பிள்ளைகள் எப்படிச்சீவிக்கிறார்கள்? அவர்களுடைய பாலியசீவியத்தில் விளங்கும் விசேஷமென்ன? குழந்தைப் பிள்ளைகள் எல்லாத்திலும் தங்கள் தாய்தகப்பனில் பூரணநம்பிக்கை வைத்துச் சீவிப்பார்கள். தங்கள் தாய்தகப்பனுக்குத் தங்களை முற்றாய்க் கையளித்துவிட்டு, அவர்களுடைய அடைக்கலத்தில் பூரண மனரம்மியமும், சமாதானமும் உள்ளவர்களாக இருப்பார்கள். எங்கள் ஆன்ம ஞானச்சீவியமும் தேவன்மட்டில் இந்தக்குழந்தைகளுடைய சீவியத்தைப்போன்றதாக இருக்கவேண்டும். குழந்தைப்பிள்ளைகள் தங்கள்பெற்றாரில் பூரணநம்பிக்கை வைத்திருப்பார்கள் அல்லவா? அவ்வாறே நாமும் சர்வேசுரனில் சிறுபிள்ளைகளின் நம்பிக்கைக்கு இணையான நம்பிக்கைவைத்தல் வேண்டும். பாலியர் தங்களைத் தங்கள்பெற்றாரின் அடைக்கலத்தில் முற்றாய்க் கையளித்துச் சீவிப்பார்கள் அல்லவா? அதுபோலவே நாமும் நம்மைச்சர்வேசுரனுடைய அடைக்கலத்தில் ஒப்படைத்துச் சீவிக்கவேண்டும். ஆனதாற்றான், இப்படிப்பட்ட சீவியத்தைப் பாலியகோல ஞானச்சீவியம்என்கிறோம். அர்ச். சின்னத்தெரேசம்மாள் தனது விசேஷித்ததொண்டு இதுவே என்று சொன்னபொழுது அநேகர் அதைப்பற்றிக் கவனஞ் செலுத்தவில்லை. ஆனால், தெரேசம்மாள்சொன்னது மெய்என்பதற்கு அவள் மரித்தபின்பு நடந்த அற்புதங்களெல்லாம் சாட்சியாகின்றன. இந்தப்புண்ணியவதி மரணத்தின்முன் வெறும் ஆசை வார்த்தைகளைச் சொல்லவில்லை. அவள்சொன்னதுமெய். அவளைப் பின்பற்றுங்கள், அவளுக்குச்செவி கொடுங்கள் என்று சொன்னாற்போலச் சர்வேசுரன் தெரேசம்மாள்மூலமாக நிகழ்த்திய அற்புதங்களினால் அவளுடையவாக்கை உறுதிப்படுத்தியிருக்கிறார். மரித்து ஐம்பது வருடத்துக்குப் பின் அல்லாது அர்ச்சியசிட்டபட்டம் சூட்டுவதைப்பற்றியகேள்வி பிறக்கப்படாதுஎன்று திருச்சபை பிரமாணம் விதித்திருந்தாலும், அப்பிரமாணத்திற் திருச்சபைஇளக்கொடுத்துத் தெரேசம்மாளுக்

(தொடர்ச்சி 5-ம்பக்கம்)

### மந்திரிகள், எம். பி. கள், மேயர்களின்

## லூர்துபதித் திருயாத்திரை

அநேக ஐரோப்பிய நாடுகளிலிருந்துபோன மந்திரிமார்களும், பாராளுமன்றஅங்கத்தவர்களும், நகராதிபர்களான மேயர்களும் சமீபத்திலே லூர்துபதிக்கு யாத்திரைபோய் ஒருங்கே செபஞ் செய்தார்கள், ஒருங்கே பூசை கண்டார்கள், குன்றின்பக்கமாக அமைந்துள்ள கல்வாரிக்குப் பாரமான சிலுவைஒன்றை முறைமாறிமாறிச் சுமந்துசென்று தபமுயற்சிகள் செய்தார்கள், வறிய யாத்திரிகர்களுக்கென்று கட்டப்பட்டவிடுதியிலே பொதுமேசை ஒன்றில் விருந்துண்டு களித்தார்கள்.

முன்னூறுபேருக்குமேற்பட்ட இவர்களெல்லாம் பிரான்ஸ், ஸ்பெயின், ஜேர்மனி, இத்தாலி, பெல்ஜியம், இஸ்றாயேல், போலாந்து, கனடாமுதலாம் நாடுகளிலிருந்து போயிருந்தார்கள். இவர்களின்யாத்திரை ஓர் தனிச்சிறப்புடையதாயும், இவர்களின் யாத்திரைவாரம் லூர்துபதி நூற்றாண்டு விழாவருடத்திலே மிகவும் சிறப்புவாய்ந்த வாரங்களில்ஒன்றாயும் காட்சியளித்தன. பிரான்ஸிய பிரதிநிதிகள் கோஷ்டியிலே இருமுன்னைநாள்பிரதமர்களான எம். ஜோர்ஜெஸ் பிதோ, எம். றொபேட் ஷூமன் என்பவர்கள் அடங்கியிருந்தார்கள். இவர்களுடன் பிரான்ஸின் இன்றைய பிரதமர் ஜெனறல் தெகோல் அவர்களின் புதிய மந்திரிமார்களில் மூவரும் — அதாவது நீதிமந்திரி எம். அன்ரோய்னி பினே, முன்னைநாள் யுத்த சேவையாளரின் மந்திரி எம். எட்மன்ட் மிச்செலே, பகிரங்க வேலைகளின் மந்திரி எம். றொபேட் பூறொன் எனும்மூவரும் வந்திருந்தார்கள்.

பிரான்ஸ்தேசம் முழுவதிலுமுள்ள நகர்கள், நாடுபுறப் பிரதேசங்களிலிருந்து பாராளுமன்ற அங்கத்தவர்கள்சமேதராய் 200 மேயர்கள் வந்திருந்தார்கள். ஸ்பானிய பிரதிநிதிகளாக அதன் பாராளுமன்ற தலைவர் செனியோர் எம். பில்பாவோ அவர்களும், அவரது உடன்அங்கத்தவர்கள் 15 பேரும் சமுகமளித்தார்கள். ஜேர்மனி, பெல்ஜியம், இத்தாலியிலிருந்து 20 எம். பி. கள் சமுகமளித்தார்கள். றோம், மதிரித், வலென்சியா ஆகிய மூன்றுநகர்களும் தங்கள் மேயர்களை அனுப்பிவைத்தன. யூதர்களின் நாடாகிய இஸ்றாயேலிலிருந்து அதன் பாராளுமன்றத்திலுள்ள ஒரேயொரு கிறீஸ்தவப் பிரதிநிதியான எம். மசோட் காசிஸ் என்பவர் சமுகமளித்தார். போலாந்து தனது பாராளுமன்றத்திலுள்ள மிகச் சிறுதொகையான கத்தோலிக்க பிரதிநிதிகளில்ஒருவரை அனுப்பி வைத்தது. கத்தோலிக்க போலாந்திலே ஆட்சிநடத்தும் கொமுல்கா என்பாரின் கம்யூனிஸ்த அரசாங்கமானது அந்நாட்டின் பாராளுமன்றத்திலே கத்தோலிக்கசமூகத்தின் பிரதிநிதிகளாக இச்சிறுதொகையினரையே அனுமதித்துள்ளது.

இந்தமந்திரிமார்களும், பாராளுமன்ற அங்கத்தவர்களும் திருக்கெபியிலும், நிலத்தின் கீழ் அமைந்துள்ள அர்ச். 10-ம் பத்திநாதரின் மகாதேவாலயத்திலும் ஒருங்கே முழந்தாட்படியிட்டிருந்தார்கள். ஒருங்கே சிலுவைப் பாதை செய்து, லூர்துபதியின் உதவிமேற்றிராணியாரான மோறி ஆண்டவர் நாட்டுக்கும், நகருக்கும் சேவை செய்வதிலே கிறீஸ்துவர்களுக்குள்ள உத்தரவாதத்தைப்பற்றி ஒவ்வோர்ஸ்தலத்திலும்செய்த சிறுஉபதேசத்தைக்கேட்டார்கள். சிலுவைப் பாதை ஸ்தலத்துக்குஸ்தலமுள்ள செங்குத்தான ஏற்றம் இறக்கங்களிலே பாரமான மரச்சிலுவை ஒன்றை இருவர் இருவராக முறைமாறிச் சுமந்துசென்றார்கள்.

இவர்களெல்லாம்அத்திருப்பதி போய்ச்சேர்ந்ததும் அவர்கள் செய்துள்ள முதற் கருமங்களில் ஒன்று, பெர்னதெத் அம்மாள் தனது பிள்ளைப் பராயத்தைச் சிலவருடகாலம் செலவிட்ட பாட்றெஸ்என்ற அயற்கிராமத்தைத் தரிசித்தமையேயாகும். எம். பிளே அவர்கள் தலைமையிலே யாத்திரிகர்கள் செபஞ்செய்தபடியே மூன்றுமைல் தூரம் நடந்து பெர்னதெத்அம்மாள் தனது வளர்ப்புத்தாயுடன் வசித்திருந்தவீட்டைத் தரிசித்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்துயிர்பெறும் புத்தளம்

"எத்தலம்போனாலும் புத்தளம் போகாதே, புத்தளம்போனால் புத்தியாய்நட" என்பது புன்மொழியோ? பொன்மொழியோ? இஃது வாசக நேயர்களின் சிந்தனைக்குரியதாகட்டும்.

அடைக்கலநாயகி அருளொடு ஆலயங்கொண்டதலம் புத்தளம். அன்றலராமலர்கள் இன்றுஉலவும் சுரும்பர் நாதங்களினால் மலர, முகைநெகிழ எத்தனிக்கின்றன. சின்னப்பர் சென்ற இடமெங்கும் தமது பொன்மொழிப் போதகங்களினால், செபத்தால், தபத்தால் வெற்றிகண்டார். இங்கும் அதே நிகழ்ச்சியே—அதேகாட்சியே இன்று. இங்குவந்த அகஸ்ரீனார்என்னும் சின்னப்பர் இன்று தமதுயாத்திரையை ஆரம்பித்துள்ளார். உயிரோடுஒட்டி உலவும் அவர்துணைக்குரவர் படகை ஓட்டுகிறார். செபமும், தபமும் அன்னவர்படைக்கலங்கள், சாதனையும், போதனையும் சாத்வீகஆயுதங்கள். அதன் பயனாக மரியாயின்சேனை உதயம். அதுவும் நினையாதநேரத்தில, காத்திராதசந்தர்ப்பத்தில் ஆடவர்பிரஸீடியமாகவே அன்று துளிர்த்தது. அதன் வேரில் பாலர்பிரஸீடியங்களும், முதியோர்பிரஸீடியங்களும் முளைத்தெழுந்தன.

7-9-58தினம் ஆதிவாரம், புத்தளம் கண்ட மரியாயின்சேனையாளரின் ஓர் அரியநாள், நன்னாள். மரியாயின் சேனையாளர்சேவைக்கு—ஆக்கத்திற்கு ஊக்கமூட்டக் குறித்துவந்தநன்னாள். அஃது மும்மாதப்பிரஸீடியா விழாவென விரைந்துவந்தது. சுற்றுவட்டாரச் செபஊழியஅங்கத்தவர்களை வரவழைக்கும் மங்களஓசையை ஒலித்து மரியாயின்சேனையாளரை, அன்னையின் அன்பர்களை வருக! வருக!! என்று வரவேற்றுஉபசரிக்குமிடமாக மிளிர்ந்தது அர்ச். மரியநாயகி தமிழ்ப் பெண்பாடசாலை. வெண், நீலவர்ணக் கொடிகள் அங்குநின்றாடின. வர்ண மலர்க்கொத்துகள் வர்ணச்சாடிகளில் அங்குமிங்குமாகஅமர்ந்து எங்கும்பரிமளம்வீசின. பிற்பகல்4மணியளவில் பிரஸீடியவிழாஆரம்பமானது. ஆரம்ப செபம், செபமாலையாவும் தமிழ், சிங்களம்எனும் இருமொழிகளிலும் சொல்லப்பட்டன. சகோதரர் கபிரியேல்அவர்கள் "மரியாயின்சேனையை முறியடித்தால் கத்தோலிக்கரை நாசஞ்செய்யலாம்" என்பதைத் தலையங்கமாகக்கொண்டு தமிழில் ஒரு சொற்பொழிவும், சகோதரர் கலிஷ்டஸ் அவர்கள் "மரியாயின்சேனைப் பிரமாணிக்கம்" என்பதுபற்றிச் சிங்களத்திலும் சொற்பொழிவாற்றினர்.

இதனைத்தொடர்ந்து வந்தஅங்கத்தினரை மகிழச்செய்யவேண்டித் தமிழ், சிங்களப் பாடசாலைமாணவிகளின் நடனங்கள் இடம்பெற்றன. அடுத்தபடியாக, சங்கிலிச்செபமும், ஞானஆலோசகர்களின் புத்திமதிகளும் இணைந்தன. எவ்விததிறம்பெற்ற நடிகர்களின் நடித்தல்களையும் முறியடிப்பதும், சிந்திப்பவர்களின் சிந்தனைசக்தியைச் சிதறடிப்பதுமாய், நமதுஞானஆலோசக குருமார்இருவரினதும் மந்திரசாலம்நிறை 'மஜிக்' நிகழ்ச்சி இடம்பெற்றது. இன்னும் எவ்வளவோதூரம் அன்னவர் தமது புனிதசாலங்களை நடத்துவார்களோ என்று அங்கத்தவர்அனைவரும் எதிர்பார்த்தனர். சபையில் ஒரேமகிழ்ச்சி. ஒரேகுளிர்ச்சி. "அமிர்தமும் அளவோடே" என்றளவில் மஜிக்சாலங்கள் முடிவடைந்தன. முடிவுரைச்செபத்தின்நேரமும் அண்மியது. அதுவும் இருபாஷைகளிலும் செய்யப்பட்டது. ஞானஆலோசகர் வண. எல். ஜே. அகஸ்ரீன்சுவாமியவர்கள் திருக்கரஆசீர்ந்தார். மரியாயின்வெக்ஸீலம் கையேந்தி 'ஆவேமரியா' கீதம்பாடி ஆடம்பர பவனியுடன் அடைக்கலநாயகி ஆலயம் அண்மினர். திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் விழாமுடிவடைந்தது.

— நிருபர்

—(⌣)—

# நூறுவது வார சதாசகாயமாதா நவநாள்

மன்னார்க்கத்தோலிக்கரின் வரலாற்றுவானிலே சுடரொளிவீசும் மற்றோர் சரித்திரசம்பவமான நூறுவதுவாரசதாசகாயமாதாநவநாள் அர்ச். செபஸ்தியார்ஆலயத்தில் சென்ற 10-9-58புதன்கிழமைகாலை 7மணியளவில் பாடற்பூசையுடன் ஆரம்பமாயது. நம்பிக்கையானமுயற்சியுடனும், நிலையானஉறுதியுடனும் மனங்கோணாது திட்டம்வகுத்தார் கட்டளைக்குரவர் அதிவண ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள். அத்திட்டத்தை உறுதியான விசுவாசத்துடன் நிறம்படமுடித்துவைத்தனர் மன்னார்க்கிறீஸ்துவர்கள்.

புதன்கிழமைஎன்றால்போதும், மன்னாரிலே எத்திசையிலிருப்பினும் பக்தர்குழாம் பவனிவந்துகொண்டேயிருக்கும். விண்ணப்பங்களும், நன்றித்துதிகளும் மாதாவின்பாதத்தைச் சரண் புகுந்துகொண்டேயிருக்கும். ஒருபுறத்தே கண்ணீர்மல்கும் கண்களுடன் காட்சியளிப்பர் ஒருசாரார். மறுபுறத்தே அன்புததும்பும் இதய உணர்ச்சியுடன் மாதாவைவேண்டிநிற்பர்மற்றோர்சாரார். காலைமுதல்மாலைவரைக் கோவில்நிறைந்தவண்ணமே இருப்பர்மக்கள். ஆம், அன்று புரட்டாசி 10-ம்நாள்தான் எங்கள்சதாசகாயம்புரியும் சாகரியின் நூறுவதுநவநாள் மிக விமரிசையுடன் கொண்டாடப்பட்டது. ஆலயத்துள்புகுந்ததும், சகாயமாதா படத்தின்மேலே 100 என்ற இலக்கம் தாரகைபோன்று தனிப்பெரும்பொலிவுடன் ஞாபகமூட்டியவாறு காட்சியளித்தது.

காலை 7மணிக்குப் பாடற்பூசையுடன் ஆரம்பமான நவநாள் பூசையுடன் முடிந்ததா? அதுதான் இல்லை. மாலை 7மணிவரை மக்கள்குழாம் ஆலயஞ் சென்று இன்பநாதஞ்செய்துஇன்னிசைபாடித் தங்கள் இதயஆவலைச்சொல்லித் தாயிடம் கல்லும்கரையும்படியாக உள்ளங்கசிந்துருகி வேண்டிநின்ற காட்சி சொல்லுந்தரமன்று. மணிக்குமணிபாடசாலை மாணவர்மாணவிகள் தாய்பாதம் பணிந்து வணங்கிய அந்தஉருக்கமான காட்சி கண்கொள்ளாக் காட்சியென்றே சொல்லலாம். பிற்பகல் 4மணிக்குச் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாகப்போகிறது; மாதா பவனிவரப்போகின்றாளென மக்களுக்கு அறிவிப்பனபோன்று ஆலய மணிகள் ஆர்ப்பரித்தன. இளம்தென்றல் வெளியிலேதவளப் பலவர்ணக் கொடிகள் ஆடிஅசைந்தகாட்சி மாதாவைவரவேற்பது போன்றிருந்தது. ஆலயத்தில்திரளாகக் குழுமியிருந்தமக்கள் ஒருமனப்பட்டுச் சதாசகாயமாதாவுக்குத் தங்கள்இதயம்கனிந்த அன்பைச் செபமாலைமூலம் காண்பித்தனர். அதன் முடிவில் சுற்றுப்பிரகாரம் ஆரம்பமாயது. பாடசாலை மாணவர்மாணவிகள் முன்செல்ல, பெண்கள் குழாம் பின்தொடர, பக்திப்பரவசம் உண்டுபண்ணும் மாதாபடம்பவனிவர ஆண்கள் பின்தொடர்ந்தனர். மாணவர்மாணவிகளின் பாமாலை பாதம்நாட, மக்கள் மலர்மாலையாகச் செபமாலைசொல்லிப் பணிந்துவர ஆலயத்தைச்சுற்றிச் சுற்றுப்பிரகாரம் விமரிசையாகநடைபெற்றது.

—(⌣)—

கட்டளைக்குரவர் நவநாளை ஆரம்பித்துவைத்தார். விண்ணப்பநேரத்தில் 1-ம்நவநாள்முதல் அன்றுவரை வாசிக்கப்பட்ட விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை 40,637 என்று கூட்டிக்காட்டினார். அதையடுத்து முருங்கன் கட்டளைக்குரவர் வண. எம். இம்மனுவேல் சுவாமியவர்கள் வழமையான பிரசங்கம்நடத்தினார். அவரின் தமிழ் வாசகம் ஓர் இன்பஊற்றாயும், மக்களின் செவிகளுக்கு ஓர்இன்னிசைவிருந்தாயும் இருந்தது. அதிலேஅவர் இற்றைக்கு 100அல்ல, 300, 400வாரங்கள் நவநாள்நடைபெற்றிருக்கலாம்; ஆனால், யேசுசபைக் குரவர் இப்படத்தைப் புதுப்பித்தநாளிலிருந்து 100வாரங்கள் இன்றோடு முடிவடைகின்றன; இதற்கிடையில் மரியன்னையின் சகாயம் அடைந்தோர் அநேகர். மற்றும் ஒருசிலர் விண்ணப்பம்பண்ணி விடையை எதிர்பார்க்கின்றனர். ஆனால், நாம்எதிர்பார்ப்பதெல்லாம் கிடைக்குமென்று எண்ணக்கூடாது; தமதுபிள்ளைக்கு எதுவேண்டும், எதுவேண்டாமென்று அவவுக்குத்தெரியும்; ஆகவே, எம்தாயில் நாம் நோகக்கூடாது; ஆனால், எம்தாய் நாம்செய்யும் விண்ணப்பங்களுக்கு ஏதோஒருவகையில் சகாயம் புரிந்துகொண்டே இருக்கின்றாளென்பதை நாம்உணரவேண்டும்; எம்தாய் எம்மைக் கைவிடமாட்டா என்பனவாகக் கூறியதன்மேல், சற்பிரசாதஆசீர்வாதம் அருளப்பட்டு, 'மங்கலம் சீர்மணி' என்ற பாவுடன் நவநாள் இனிதே முடிவடைந்தது.

— நிருபர்

—(⌣)—

# நெடுந்தீவும் பிரயாண வசதிகளும்

பிரசவகாலம்கிட்டியதும் அதற்கு வேண்டிய சரக்குச்சாமான்கள் எடுப்பதற்கு வத்தையில்போனால் பிள்ளை பிறந்து தவழும்பருவத்தில்தான் திரும்பிவருவார்கள் என்பது பழங்கதை. பலநவீன போக்குவரத்துச் சாதனங்கள்மலிந்து, உலகமக்கள் சௌகரியமாகப் பிரயாணஞ்செய்யும் இந்த 20-ம் நூற்றாண்டில்தானும் இத்தீவுமக்கள் போதியபிரயாணவசதியற்றுக் கஷ்டப்படுகிறார்கள்.

மோட்டார்ப்படகுதான் ஒரேயொரு தகுந்த பிரயாணசாதனம். இருவாரங்களின்முன் வீசியகடும்காற்றினால் கடல் கொந்தளித்ததின் விளைவாக மோட்டார்ப்படகின்சேவை தடைப்பட்டது. தபால், பத்திரிகை, இன்னும் எவ்வளவோபொருட்கள் தடைப்பட்டு, அன்றுதொட்டு ஏதோபுறம்பானஉலகில் நாங்கள்வாழ்வதுபோல் மக்கள்தொடர்பற்றுத் தத்தளித்தார்கள். 2-ந்திகதி பாடசாலைஆரம்பநாள். மோட்டார்ப்படகுச் சேவை இல்லாததால் எத்தனையோ ஆசிரியர்கள் வந்தவழியே வீடுதிரும்பினர். பாடசாலைஆரம்பத்திற்கு ஆசிரியர்களை எதிர்நோக்கியிருந்த மாணவர்களும் ஏக்கமடைந்தார்கள். பிரயாணச் செலவுடன் ஊர்போய்ச்சேர்ந்து விடலாமென்றுவந்த எத்தனையோமக்கள் மோட்டார்ப்படகுச்சேவை தடைப்பட்டதும், ஆருமற்றஅனாதைகள்போல் அங்கலாய்ப்புற்றுஎன்செய்வது? எங்கு தங்குவது? யாரிடம்போவது? எனப் பலவாறு தங்கள்நிலைமையை நொந்து வேதனைப்பட்டனர். "தகப்பனார் தலையில்காயங்களுடன் அவலநிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்" என்று தந்திச்செய்திபெற்றமக்கள் போகவசதியில்லாமல் அழுதவண்ணம்நின்றார்கள்.

இவ்வேளை வள்ளத்திலாவது போவோமென்று புறப்பட்டுச்செல்லுகையில் கடலின் கொந்தளிப்பாலே அலைகளால்அடிபட்டு, ஒதுக்கப்பட்டு, அல்லோலகல்லோலப்பட்டுக் களிழ்ந்து நனைந்து உயிர்போகும்தருவாயில் மறுகரைஅடைந்தனர் ஒருசிலர்.

இப்போக்குவரத்துக்கு உள்ளது ஒரேஒரு மோட்டார்ப்படகு. நாற்பதுபேருக்குமேல் ஏற்றமுடியாது. அதுவும் ஒருதினத்திற்கு ஒருமுறைதான் பிரயாணிகளை ஏற்றிச்செல்லும். நாளாந்தம் ஏறக்குறைய நூறு நூற்றைம்பதுபேர் போக்குவரத்து நடத்தும் இவ்விடத்திற்கு நாற்பதுபேரை ஒருமுறை ஏற்றிச்சென்றால் மற்றவர்களின் கதி என்ன?

சிலவேளைகளில் 'கொப்பறா' அடுக்குவதுபோன்று பிரயாணிகளை அமர்த்துவதால் கால்கள்விறைத்து வேதனைப்படும் அதேநேரத்தில் அலைகளால் நனைவது ஒருபக்கம்; வக் என்று சத்தி எடுப்போரின் பரிதாபநிலை மறுபக்கம். இ[illegible] இளைத்துக் களைத்து, வெளுத்து மறுஉலகம்போய் வந்தவர்கள் போல் எல்லவரும் இறங்கும்பொழுது காட்சியளிப்பார்கள். திருத்துவதற்காக அனுப்பப்பட்ட "இராஜேஸ்வரி" என்ற பெரியமோட்டார்ப்படகின் நிலை இன்னும் தெரியவில்லை. போனது ஓரேபோக்காய்ப் போய்விட்டதுபோல் தெரிகிறது.

மற்றஇடங்களைப் போன்றதல்ல இத்தீவகம். நாலாபக்கமும் கடலாற் சூழப்பட்டிருப்பதால் கடலாலன்றிப் பிரயாணத்திற்கு வேறுவழியில்லை. நாளாந்தம் தங்கள்உயிரையே அர்ப்பணம் செய்து பிரயாணம்செய்யும் இத்தீவு மக்களும் இலங்கை அரசாங்கத்தின் பிரசைகளேயென உணர்ந்து போதிய பாதுகாப்பு நிறைந்த வசதிகளைச் செய்வது முக்கியகடமையாகும்.

நாட்டின்நலனுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்ட பெரியார்கள் இப்பரிதாபநிலையை நன்குணர்ந்தும் கண்மூடித்தனமாய் இலைமறைகாய்கள்போல் இருப்பது, நாட்டில் நடமாடுவது நன்றல்ல. ஆதலால், பாமரமக்களின் பரிதாபநிலையைத்திருத்த முற்படுங்கள். தனக்கென வாழாது பிறர்க்குரியாராவதே தனிமனிதப் பண்பெனஎண்ணி இத்தீவு கல்வியால், கலாச்சாரத்தால் நிறைய வேண்டின் பிரயாணவசதியை வளம்பெறச் செய்யுமட்டும் அரசாங்கத்தை அலட்டிக் கேட்பது அவர்களின் முக்கியகடைமையாகும். எனவே, இத்தீவின் பரிதாபநிலையை உணர்ந்து ஆவன செய்வார்களாக.

S. P. M.
Delft.

---

### நாய்களுடன்சென்ற றெக்கெற்

சோவியற்ருஷியா இரு நாய்களைக் கொண்ட றொக்கற் எனப்படும் ஆகாய பாணம்ஒன்றை வானவெளிக்கு அனுப்பித் திரும்பவும் அதைப் பத்திரமாகப் பூமிக்குக் கொண்டுவருவதில் வெற்றிபெற்றிருப்பதாய் மாஸ்கோநகரிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. முன்னதாகவே ஏற்பாடுசெய்திருந்த ஓர் இடத்திலிருந்து 279 மைல் உயரத்துக்கு அனுப்பப்பட்டதெனச் சோவியற்செய்திஸ்தாபனம் அறிவித்துள்ளது. சர்வதேச பூப்பௌதிகவருடத் திட்டத்தின் கீழ் சென்ற ஆவணி 27-ந் திகதியன்று இவ்விருநாய்களும் ஓர்றொக்கெற்றில் வைத்து வானவெளிக்கு அனுப்பப்பட்டன. நாய்களுடன் வைக்கப்பட்ட ஏனைய விஞ்ஞான சாதனங்களையும் சேர்த்து றொக்கெற்றின்நிறை 3,725 றாத்தல். பூமிக்குமேலேயுள்ள காற்றுமண்டலத்தைப்பற்றிய ஆராய்ச்சிக்காகவே இந்த விஞ்ஞான சாதனங்கள் றொக்கெற்றில் பொருத்தப்பட்டிருந்தன. பூமிக்குத் திரும்பிவந்த நாய்களின் உடல்நிலை திருப்திகரமாயிருந்ததாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதசாட்சிகளின் இராக்கினிமாதா ஆலயம்

அப்போது நாஸிகளாலே கத்தோலிக்கமக்கள் பெருந்தொகையாகக் கொன்றழிக்கப்பெற்ற பேர்லின் நகர சிறைச்சாலையான புளொட்சென்ஸியில் வேதசாட்சிகளின் இராக்கினிமாதா ஆலயம்ஒன்றைக் கட்டியெழுப்புமாறு சென்ற மோட்சாரோபணமாதா திருநாளன்று ஜேர்மனியிலுள்ள மேற்றிராசனங்களிலெல்லாம் நிதிசேர்க்கப்படலாயிற்று. ஹிற்லரின்காலத்து வேதசாட்சிகளின் ஞாபகார்த்த ஆலயமாக இதுவிளங்கி, ஜேர்மனியின் சகல பகுதிகளிலிருந்தும், அகில முழுவதிலிருந்தும் பேர்லின்நகர் செல்லுகின்ற தரிசகர்களுக்கெல்லாம் சுதந்திரத்திற்காகக் கத்தோலிக்கரிடையே தங்கள் உயிரை அர்ப்பணஞ்செய்த தொழிற்சங்க தலைவர்களையும், பிரபுக்களையும், அரசியல்வாதிகளையும், தொழிற்தலைவர்களையும், குருமாரையும், மற்றும் சாதாரண கத்தோலிக்கரையும் நினைவுறுத்திக்கொண்டிருக்கும்.

---

## இரும்புத் திரையின் எல்லையிலே

கம்யூனிஸ்த ஆட்சியிலுள்ள கிழக்குஜேர்மன் பிரதேசத்துக்குமேலாகத் தோன்றுவதாக கியஸ்குன்றின்மீது கொங்கிறீற் கொண்டுசெய்த 96 அடி உயரமான கிறீஸ்துநாதரின் பாரிய சுரூபமொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பிறீட்லான்ட்நகரிலுள்ள பாரிய அகதிகள்முகாமுக்குச்சமீபமான ஓர்இடத்திலேயே அது ஸ்தாபிக்கப்படும். இந்த முகாம் இரண்டாவது உலகயுத்தம் முடிந்தகாலமுதல் பல்லாயிரக்கணக்கான டிக்களுக்குப் புகலிடமளித்துள்ளது. இரும்புத்திரையின் எல்லையையடுத்துக் கிறீஸ்துவேதவிசுவாசத்தின் ஓர் சின்னமாக இப்படியான ஒரு சுரூபம் ஸ்தாபிக்கப்படவேண்டுமென்று சுதந்திர மேற்குஜேர்மனியின் பிரதமரான டக்றர் கொன்றூட் அடனேவர் அவர்களும் சமீபத்திலே ஆலோசனை கூறியிருந்தார். இதற்கான செலவுபணம் கோவில்களாலும், அரசாங்கத்தாலும் உதவப்படவிருக்கிறது.

---

## பாத்திமா மகாதேவாலயத்தில்

ஹங்கேரியின் முதலாவது கிறீஸ்தவ அரசரான அர்ச். ஸ்ரீபினின் திருச்சுரூபம் ஒன்று கோவா டா ஈறியாவிலுள்ள பாத்திமாநாயகியின் மகாதேவாலயத்திலே ஓர்சுவர்நீளமுள்ள மாடப்புரைகளுள்ஒன்றில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. ஆறடிக்குமேல் உயரமுள்ள இந்தச் சுரூபத்திலே ஸ்ரீபின்அரசர் 2-வது சில்வேஸ்தர்என்னும் பாப்பானவரிடமிருந்து பெற்றுக்கொண்ட ஹங்கேரியின் அதேமாதிரியான திருமுடியைத் தமதுகரங்களில் தாங்கி பாவனையாய்க் காட்சியளிக்கின்றார். ஓர்ஹங்கேரிய சுருசிற்பியான வண. அல்பேட் சாப்பன்யோஸ் சுவாமியாரால் இது செய்யப்பட்டது. அர்ச். ஸ்ரீபின்அரசர் 975-ம் ஆண்டுமுதல் 1038-ம் ஆண்டுவரை சீவித்திருந்தார். இவர் 1083-ம்ஆண்டு அர்ச். ஏழாவதுகிறகோரியார்எனும் பாப்பானவரால் அர்ச்சியசிட்டபட்டம் சூட்டப்பெற்றார். 1031-ம் ஆண்டு மரணமடைந்த இவரது ஏக புதல்வரான அர்ச். எமெறிக்கும் அவருடனேயே அர்ச்சியசிட்ட பட்டம் சூட்டப்பட்டார்.

---

## கத்தோலிக்க நடிகையின் அரசியற் பதவி

சலனப்பட உலகிலிருந்து ஐக்கியநாடுகளின் சபைக்கு ஐக்கிய அமெரிக்க தூதுக்கோஷ்டியில் ஓர்அங்கத்தவளாய் முதன் முதலாக ஈறேன் டன்என்ற பிரபல கத்தோலிக்க சினிமாநடிகை நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றாள். சமீபத்திலே கடுமையாகக் கடமைபார்க்க வேண்டியிருந்த மூன்றுமாதகாலத்திலும் அந்தத் தூதுக்கோஷ்டியில் இவள் சேவைசெய்திருக்கிறாள். இதுகாலவரை இவள் பல்லாயிரக் கணக்கான பத்திரங்களிலே தனது கைச்சாத் திட்டிருக்கின்றாள். அவற்றுளெல்லாம் இவள் அதிகம் பெருமை பாராட்டிக் கொள்வது ஒன்றேயொன்றையிட்டுத்தான். அதாவது, அகதிகளுக்குஉதவியாய் ஐக்கியஅமெரிக்கஅரசாங்கம் கொடுக்கஉடன்பட்ட 2 கோடியே 15 லட்சம் டலர் உடன்படிக்கைக்குத் தான் கைச்சாத்திட்டதையிட்டுத்தான். டக்றர் பிரான்சீஸ் கிறிவ்வின் என்பவரை இவள் மணஞ்செய்து கொண்ட 31-ம் ஆண்டு நிறைவு விழாவைச் சென்ற ஆடிமாதம் கொண்டாடினள். தங்கள் சமயமே தங்களைச் சேமமாகவும், பாதுகாப்பாகவும் வைத்திருக்கிறதென்று இவள் கூறுகின்றாள். ஓர்கணவனும், மனைவியும் ஒருங்கே செபஞ்செய்யும்போது, ஒன்றுசேர்ந்து பூசைக்குப் போகும்போது, ஒருங்கே தேவதிரவியானுமானங்களைப் பெறும் போது குடும்பத்தைக் குலைத்து நாசம் விளைக்கக்கூடிய உலக தலையீடு எதுவும் இல்லாதபடி விசேஷ நெருங்கியஒற்றுமையை உண்டுபண்ணுகிறதென்பது இவர்களின் நம்பிக்கையாகும்.

---

## தபால் முத்திரையும் வேத புத்தகமும்

ஐக்கியஅமெரிக்க தேசத்திலே சமயசுதந்திரம் அளிக்கப்பெற்ற மூன்றாம் நூற்றாண்டின் ஞாபகார்த்தமாக மூன்றுசதத் தபால் முத்திரைஒன்று சமீபத்திலே பாவனைக்கு வெளியிடப்படலாயிற்று. இந்த முத்திரையிலுள்ள சித்திர வேலைப்பாட்டின் மத்தியில் 'பைபிள்' எனப்படும் வேத புத்தகத்தின் பிரதிரூபம் ஒன்று அமைந்திருக்கிறது. இந்தமுத்திரை அங்கு சமயசுதந்திரம் முதன்முதலாக அருளப்பட்ட பிளஷிங்நகரில்தான் முதன்முதலாகப் பாவனைக்கு வெளியிடப்பட்டது. அதனைத்தொடர்ந்து தேசமெங்குமுள்ள தபாற்கந்தோர்களிலே சுமார் பத்துக் கோடி முத்திரைகள் விற்பனை செய்யப்பட்டன. அமெரிக்க தபால்முத்திரை ஒன்றிலே வேத புத்தகத்தின் பிரதிமை காணப்பட்டமை இது இரண்டாம்முறையாகும். முதலாவது தபால்முத்திரை 1956-ம்ஆண்டின் தொழில் தின ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது. அதிலே ஒருதாய் "சீவிய புத்தகத்தை" — அதாவது வேதபுத்தகத்தைத் தனது பிள்ளைக்கு வாசித்துக்காட்டும் பாவனையான சித்திரம் அமைக்கப்பட்டிருந்தது.

---

## ரோமாபுரியின் அமெரிக்க கோவில்

ரோமாபுரியில் சஞ்சரிக்கின்ற அமெரிக்க கத்தோலிக்கருக்குரிய சந்தாசூசன்னா என்ற தேசிய கோவிலானது 16-ம் நூற்றாண்டிலிருந்த தனது புராதன அழகிய தோற்றத்தை அளிக்கும் வகையிலே புதுப்பிக்கப்படும் திருப்பணித் திட்டத்தில் ஓர்பகுதியாய் அதன் பக்கச்சிற்றாலயங்களுள் ஒன்றின் வேலை தற்போது பூர்த்தியடைந்திருக்கிறது. ரோமாபுரியிலே சித்திர வேலைப்பாடுகளால் அதிகம் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டுள்ள சிறியகோவில்களில் ஒன்றான சந்தாசூசன்னாஎன்ற இந்தக்கோவில் 1922-ம்ஆண்டுமுதல் அங்குள்ள அமெரிக்ககத்தோலிக்கருக்கெனப் பாவிலுவானவர் சபைக் குருமாரால் பரிபாலிக்கப்பட்டுவருகிறது. தற்போது புதுப்பிக்கப்பட்டுள்ள சிற்றாலயம் அர்ச். லோறெஞ்சியார் பேரால் பிரதிட்டை செய்யப்பட்டிருக்கிறது. இதன் சுவர்கள் அர்ச். லோறெஞ்சியாரின் வேதசாட்சியத்துவத்தைப் பிரதிபலிக்கும் சித்திரவேலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றன.

---

## லெபனனின் கத்தோலிக்க ஜனாதிபதி

நேர்மையும், உத்தமவேதானுசாரமுமுடைய கத்தோலிக்கரெனப் பிரஸ்தாபமாக அறியப்படுகிறவரான ஜெனறல் புவாட் செஹாப் அவர்கள் மத்தியகிழக்கிலுள்ள லெபனன்நாட்டின் புதிய ஜனாதிபதியாகத் தெரியப்பெற்றிருக்கின்றார். தமது லெபானிய மக்களுக்குச்சமாதானத்தையும், பாதுகாப்பையும் திரும்பவும் கொண்டுவரக்கூடிய ஒரேயொரு மனிதர் இவரேயென்று அந்நாட்டிலுள்ள மரோனித்திய கத்தோலிக்கரின் பத்திறியாக்குவான மியோச்சி அதிமேற்றிராணியார் கூறுகின்றார். லெபனன் உள்நாட்டுயுத்தத்தை ஓர்முடிவுக்குக் கொண்டுவரக் கூடியவரும், அங்குள்ள அமெரிக்கபடைகளை வெளியேறும்படி செய்யக்கூடியவருமானமனிதர் இவரேயெனத் தற்போது எதிர்பார்க்கப்படுகிறது. 55 வயதுடைய புதிய ஜனாதிபதி மத்திய லெபனனிலே மரோனித்தியசமூகத்தின் மத்தியிலுள்ள காஸிர் எனுமிடத்தில் பிறந்தார். இவர் எமீர்—அதாவது இளவரசர்பட்டத்துக்கு உரிமைபூண்டவர். ஆனால், இவர் அதனைப் பிரயோகிப்பதில்லை.

---

—(⌒)—

### மார்த்தா, மரியாளின் சகோதரனை

# லாசறுவின் கல்லறை

சர்வதேச பிரசித்திபெற்ற புதைபொருளாராய்ச்சி வல்லுநரும், ஓர்அமெரிக்க பிரான்சீஸ்கன்சபைக் குரவருமான வண. சில்வேஸ்தர் சலர் சுவாமியார் நடத்திய ஆராய்ச்சியின்விளைவாய் ஒலிவேத்மலையிலேகிறீஸ்துநாதர் மரித்தவர்களிடையிலிருந்து லாசறுவை உயிரோடெழச்செய்த கல்லறையிருந்ததாகப் பாரம்பரியமாகக் கொள்ளப்பட்டுவந்த இடம் அதுவேயென்று தற்போது உறுதிப்படுத்தியிருக்கின்றார். ஏழுவருடகாலமாகப் பூமியை அகழ்ந்தும், ஆராய்ச்சிசெய்தும் தாம் கண்டுகொண்டவைகளை விளக்கி 389 பக்கங்கள்கொண்ட புத்தகம் ஒன்றைச் சமீபத்திலே இவர் வெளியிட்டிருக்கின்றார். ஜெருசலேமிலிருந்து சுமார் ஒருமைல் தூரத்திலுள்ள பெத்தானியிலே லாசறுவின் கல்லறைக்குமேலாக அல்லது சமீபமாகக் கட்டப்பட்டுள்ள அநேககோவில்களை ஆராய்ச்சிசெய்தும், அகழ்ந்துபார்த்தும் விட்டு அர்ச். லாசறுவின் ஞாபகார்த்தமான அதிகம்முந்திய கோவில் அவரது கல்லறைமீளம் கட்டப்பட்டதென்றும், அதற்குக்காரணம், நிலம் மலைப்பாங்காய் இருந்தமையேயென்றும் கண்டறிந்திருக்கின்றார். நான்காம்நூற்றாண்டிலே கட்டப்பட்ட இந்தக்கோவில் பூகம்பமொன்றினால் அழிக்கப்பட்டுப் பின்னர் ஐந்தாம்நூற்றாண்டிலே திரும்பக் கட்டப்படலாயிற்று. இத்தனை நூற்றாண்டுகளிலும் அந்தஇடத்தில் ஏழுகோவில்கள் கட்டப்பட்டுள்ள ஏழுசமநிலங்களை அவர் கண்டறிந்திருக்கிறார். தற்போதுள்ள இக்காலமாதிரியான கோவில் பார்லூஸி என்ற இத்தாலிய நிர்மாண சிற்பியின் தலைமையிலே இருவருடங்களின் முன் கட்டிமுடிக்கப்பட்டதாகும். கிறீஸ்துநாதரின் காலத்தில்மாத்திரமல்ல, கி. மு. ஆறாம்நூற்றாண்டிலே பார்சிகரின் காலத்திலும் பெத்தானி அறியப்பட்டதொன்றாகும். ஒறியென் என்பவர் குறிப்பிட்டுள்ள லாசறுவின் கல்லறை சேமக்காலை ஒன்றால் சூழப்பட்டு, பெத்தானி தனக்கென்று சொந்தமாய் ஓர்சவக்காலையைக் கொண்டிருந்ததென்ற சுவிசேஷ வரலாற்றை உண்மைப்படுத்துகின்றது. மார்த்தம்மாள், மரியமதலேனம்மாள், லாசறு என்பவர்களின் மனையையோ, அன்றேல் கிறீஸ்துநாதரின் திருப்பாதங்களை மரியமதலேனம்மாள் கழுவிய சீமோனின் மனையையோ இடிகரைகளின்மத்தியிலே வித்தியாசங் கண்டுகொள்ள முடியாதிருக்கிறதென்று வண. சலர் சுவாமியார் கூறுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### புரட்டாசிமாதம்

**பொதுக்கருத்து:** தேசிய பொதுச் சபைகளில் இறைவனின் திருப்பெயரும், சட்டங்களும், தகுந்த இடமும், மதிப்பும் பெறும்படியாக வேண்டிக் கொள்வது.

**வேதபோதக கருத்து:** ஆசிய, ஆபிரிக்க சர்வ கலாசாலை மாணவர்கள் கிறீஸ்துநாதரை அறிந்து மதிக்கும்படியாக மன்ருடிக்கொள்வது.

சத்திய வேத

**பாதுகாவலன்**

1958-ம் ஆண்டு
புரட்டாசி மாதம் 18-ந் திகதி

## தமிழினமே எச்சரிக்கை!

குடும்பகட்டுப்பாடு என்ருல், அதற்கு ஓர்வரைவிலக்கணம் கூறுவதென்ருல், குடும்பத்தை—குலத்தைக்கெடுக்கவந்தஓர்கோடரிக்காம்பென்றே கூறலாம்; ஆகவே, குடும்பத்தையும், குலத்தையும் கெடுப்பதான—கெடுத்துஅழிப்பதானகுடும்பகட்டுப்பாட்டை—மற்ருேர்விதமாகச் சொல்லுகில் கர்ப்பத்தடையைச் செய்துகொள்வது எத்துணை பெரும் பாதகச்செயல்என்பது தானுகவேவிளங்கும். மகாத்மா என்று கொண்டாடப்படும் காந்திஜி செயற்கைமுறைக் குடும்ப கட்டுப்பாட்டை ஒருபோதுமே அங்கிகரிக்கவில்லை. அதனை அங்கிகரிக்குமாறு எத்தனையோபேர் எத்தனையோமுறைகளிலே அவரைவேண்டியும் கருமம் கைகூடவில்லை. கர்ப்பத்தடைமுறை நீதிக்கும், ஒழுக்கத்திற்கும் விரோதம், அதுபாவம், தேசதற்கொலை யென்று அவர்கண்டித்தார். ஒரு வேசிக்கும், கர்ப்பத்தடைசெய்யும் ஓர்மனைவிக்கும் வித்தியாசமே இல்லை; முந்தியவள் தனது உடலைப் பலருக்குவிற்கின்ருள்; பிந்தியவள்—அதாவது மனைவி அதை ஒருவனுக்குவிற்கிருள்; பற்பலகாரணங்களால் தளர்ந்திருக்கும் ஓர்சமூகம் இவ்வித செயற்கைத் தடைமுறையினுல் இன்னும்அதிகமாகத் தளர்ந்து போகும்; தீமைவிளைக்கும் இந்த வேலையைக்கைவிட்டு, விவாகமானவர்களும், விவாகமாகாதவர்களும்பிரமச்சாரியம்அனுசரிப்பதைப் பிரபலப்படுத்தவேண்டும்; இதுதான் கண்ணியமான குடும்பகட்டுப்பாடுஎன்று அவர் கூறியிருக்கிருர்.

குடும்பகட்டுப்பாடு—அதாவது செயற்கைமுறைக் கர்ப்பத்தடைபற்றி ஆராய்ச்சிசெய்தபிரபலவைத்தியர்ஒருவர் யாதுகூறுகின்ருர்? தீயபொருளாதார அமைப்பாலும், நல்லவைகளைப் புறக்கணித்துச்சமூகநீதி தவறியதாலும் மனிதசமுதாயத்தில் தோன்றிய பலதேவைகளும், கஷ்டங்களும் சமூகதற்கொலையான கர்ப்பத்தடையால் ஒரு நாளுமே தீர்க்கப்பட முடியாது; தாயாகமறுத்துத் தன்மானத்தை இழந்துவிட்டஒருமனைவி கணவனின்விளையாட்டுப்பொருள்; தன் மனிதகண்ணியத்தை இழந்தவள்; இவ்விதம்அவமரியாதை செய்யப்படுவதை—தான்ஓர்விலைமாதைப்போல் நடத்தப்படுவதை மனதில்எதிர்க்கிருள். நரம்புவியாதிகளுக்கும், தூக்கமின்மைக்கும் ஆளாகிருள்; இயல்பானவாழ்வுநடத்தும் குடும்பங்களில் நரம்புவியாதிகள் பெரும்பாலும்ஏற்படுவதில்லை என்றெல்லாம் கூறுகின்ருர்.

பொய்யுடலுக்கு மெய்யென்று பெயரிட்டதுபோலும், நாகபாம்புக்கு நல்லபாம்பென்று நாமமிட்டதுபோலும் மக்கள்சமுதாயத்தில் எத்தனையோஊழல்களையும், பழிபாதகச்செயல்களையும் உண்டுபண்ணக்கூடிய கர்ப்பத்தடைமுறைக்கும் குடும்பகட்டுப்பாடென்று பெயர்சூட்டியிருப்பதால் எவருமே மதிமயங்கிவிட வேண்டாம். செயற்கைமுறைக் கர்ப்பத்தடையால் இந்நாட்டின் இளைஞர்உலகம்பாழ்பட்டு அந்தோ! பரிநாசமாகிவிடும். இவைகளையெல்லாம் ஊன்றிநோக்காது அரசாங்கமே—அரசாங்கதலைவர்களே குடும்பகட்டுப்பாட்டுப் பிரசாரஞ்செய்யவும், அதனைநடைமுறைக்குக் கொண்டுவரவும் முனைந்துநிற்பது என்னபெரும் வெட்கக்கேடு! எத்துணை மதிகேடு!

ஓ, தமிழினமே! எச்சரிக்கை! உனதுவருங்காலம்—உன்மொழியின் வருங்காலம் யாதாகுமோவென்று நீ சதா கலங்கிக்கொண்டிருக்கிருய். இன்று உனக்குக் கடுஞ்சோதனைகாலம்; பெருங்கஷ்டகாலமென்று இரவுபகலாய் நினைந்து ஏங்கிக்கொண்டிருக்கிருய். தமிழ்மொழி அழிந்துவிடுமோ, தமிழினந்தான் அழிந்தொழிந்து விடுமோவென்று தமிழனே! சிலவேளைநீசிந்தித்துச் சிந்தைகலங்கியிருக்கலாம், ஆனல், பிறர்உனக்குக் கேடுசூழுகிருர்களென்று நீஎண்ணும் போது, சணப்பன்வீட்டுக்கோழி போன்றுஉனக்குத்தானே நீகேடுசூழஎண்ணுதே. குடும்பகட்டுப்பாடு—கர்ப்பத்தடையென்ருல் உன்இனத்தை அழியாமல் அழிக்க எடுக்கப்படும் அந்தரங்க நடவடிக்கையென்பதை மறந்துவிடாதே. ஆராவதுவைத்தியர்களோ, அதிகாரிகளோ அதைப்பற்றிப் பிரசாரஞ்செய்தால் அந்தப்பைத்தியமானபேச்சில் எடுபட்டுவிடாதே. தமிழினமே உன்இனம்பெருகுக! உன்புனித குடும்பவாழ்க்கை நிலைபெறுக!

---

● 1956-ம்ஆண்டுநடைபெற்ற ஹங்கேரிய சுதந்திரஎழுச்சிக் கலகத்தின் பின் அங்கிருந்தும் வெளிகொண்டு கனடாதேசத்திற்போய் அடைக்கலம் புகுந்துள்ள ஹங்கேரியஅகதிகளின் தொகை தற்போது 38,200பேராகிவிட்டது. ஆஸ்திரிய, இத்தாலிய முகாங்களில் இன்னும் 9,000ஹங்கேரியஅகதிகள் இருந்துவருகின்ருர்கள். இவர்களும் இவ்வருடஇறுதிக்குமுன் தூரமானமேற்குநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட விருக்கின்ருர்கள்.

● அர்ச். பத்தாம்பத்திநாத பாப்பானவர் கடைசியாகஅணிந்திருந்த "கசக்"எனப்படும் நீண்டஅங்கியானது தற்போது இங்கிலாந்திலுள்ள பேரான உஷோகுருமடச் சிற்ருலயத்தில் அவருக்குத்தோத்திரமாக இவ்வருடம் அமைக்கப்பட்ட அடித்தார்ஒன்றிலே பூச்சியமாகவைத்துக் காப்பாற்றப்பட்டுவருகிறது. அர்ச். பத்தாம்பத்திநாதருக்கு இராச்சியமந்திரியாராயிருந்தவரும், இந்தக்குருமடத்தின் பழையமாணவருமான கருதினுல் மெறிடெல்வால்ஆண்டவரே அன்பளிப்பாக இதனை [illegible] உபகரித்தார்.

# அடைக்கலமாதாவின் ஆலயவிழா

### யாழ்ப்பாணம்

தவழ்மதி 8-ந் திகதியன்று வழமைப்பிரகாரம் இவ்விழா நவதின உற்சவங்களுடனும், என்றுமில்லாத பக்திப்பரவசத்துடனும் கொண்டாடப்பட்டமையானது பொன்னட்சரங்களால் பொறிக்கத்தகுந்த ஓர்உந்நதசம்பவமாகும்.

நவதினஉற்சவங்கள் சென்ற ஆவணி மாதம் 30-ந் திகதி சனிவாரம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் செபமாலை, பிரார்த்தனை, வண. எம்.ஜே. மரியாம்பிள்ளை சுவாமியவர்களின் பத்திரசம் பெருக்கெடுத்துப்பாயும் அமிர்த பிரசங்கம், திவ்விய சற்பிரசாத ஆசீர்வாதம் என்பனவற்றுடன் முடிவாகிவந்தன. நவதினஈற்ருந்த உற்சவதினமன்று வேஸ்பர் என்னும் மாலை ஆராதனை பாடப்பட்டது. ஆலயமானது உள்ளும்புறமும் சித்திரவிசித்திரத் தட்டிகளாலும், இயற்கை, செயற்கைப் புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பெற்று, மின்சாரதீபங்களால் பிரபைவீசப்பெற்றுத் தேசோமயமாய் விளங்கின. திருநாளாகிய 8-ந் திகதிகாலை பொழுதுபுலர்ந்தது. ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. மக்கள் குதூகலத்தோடு கும்பல் கும்பலாய்ச் சரியத்தொடங்கினர்கள். பயபக்தியுடன் பூசைகண்டு, தெய்வீக விருந்தருந்தித் தேவதாயாரை வாயாரமனதாரப்போற்றி நன்றிமாலைகள் சாற்றிநின்ருர்கள்.

பிற்பகலானதும் ஆடம்பரமாக நடைபெறப்போகும் மாபெருஞ் சுற்றுப்பிரகாரத்துக்குச் சமூகமளிக்குமாறு ஆலயமணிகள்நாதகீதஞ்செய்துபக்தகோடிகளை அழைத்தன. சங். கன்னியாஸ்திரிமாரும், மாணவர், மாணவிகளும், பங்குக்கிறிஸ்துவர்களும், அயற்கிராமங்கள், விசாரணைப்பங்குகளைச் சேர்ந்த கிறிஸ்துவர்கள், பிறசமய மக்களுமாக பெருந்திரளான மக்கள் ஆலயவளவில் வந்துகூடிச் சமுத்திரம்போலத் தேங்கியிருந்தார்கள். லூர்துபதியிலே தேவதாயார் காட்சியளித்த நூற்ருண்டு விழாவினதும், ஆலயத்தில் நடைபெற்றுவரும் சதாசகாய மாதாவின் 300-வது நோவனைப் பக்திமுயற்சியினதும் ஞாபகார்த்தமாக இந்தமாபெரும் சுற்றுப்பிரகாரம் பட்டண வீதிகளினூடாகப் பெரிதும்மாட்சியுடன் நடந்தேறியது. சிங்காசனத்திலிருந்துவந்த பரிசுத்த அடைக்கலநாயகியின் பெரிய சுரூபம் இறக்கப்பெற்று இவ்விதம் பவனியாகக் கொண்டுசெல்லப்பட்டது இதுவே முதன்முறையாகும். இதற்கெனச் சித்தஞ்செய்யப்பெற்று, மின்சாரதீபங்களால் சொலித்துக்கொண்டிருந்த அலங்காரத்தேரிலே மாதா ஊர்வலமாக எழுந்தருளிப் பலவர்ணத்துவசங்கள், மகரதோரணங்கள், சித்திரவேலைப்பாடுகளாலே சிங்காரகோலமுற்றுவிளங்கிய வீதிகளினூடாகப் பவனிவந்தகாட்சிபெரும்மாட்சியுடைத்தாயிற்று.

சங். கன்னியாஸ்திரிமாரும், பாடசாலைப்பிள்ளைகளும், பற்பல பக்திச்சபைகளின் அங்கத்தவர்களும் தத்தம் விருதுக்கொடிகளை ஏந்தியவண்ணம் இருவரிசையாக அணிவகுத்து முன்செல்ல, ஒலிபரப்பியானது செபமாலை, பிரார்த்தனை, சங்கீதங்களைப் பரப்பிச்செல்ல, பக்திப்பரவசமாக ஊர்வலம் நடந்து ஆலயமைதானத்தை அடைந்ததும் ஆலயமுன்றிலில் இருந்த பலிபீடத்தில் உருக்கமான செபவேண்டுதல்களுடன் அருளப்பெற்ற சற்பிரசாத ஆசீர்வாதத்துடனும், வண. கட்டளைக் குரவரின் உருக்கமான நன்றித்திதியுடனும் விழா பூர்த்தியாயிற்று.

---

# சுதேச வர்த்தமானம்

### முதலாம்நம்பர் விரோதி

அரசியல்தான் கொழும்புத் துறைமுகத்தின் முதலாம்நம்பர் விரோதியென்று சர்வதேச தொழில்ஸ்தாபன நிபுணரான திரு. ஈ. எஸ். லூயிஸ் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்ருர். கொழும்புத்துறைமுகத்தில் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி வேலைகளை ஆராய்ந்து அறிக்கைசமர்ப்பிக்குமாறு சர்வதேச தொழில்ஸ்தாபனம் இங்கே இவரை அனுப்பிவைத்ததென்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

### யாழ்ப்பாணமும் சிறுதானியங்களும்

சென்றஉலகயுத்தத்தின்பின் தினை, குரக்கன், வரகு முதலாம் சிறுதானியங்களை அதிகமாகஉற்பத்திசெய்வதிலே நெடுங்காலம் பராகண்டிதமாய் இருந்துவந்த யாழ்ப்பாணக் கமக்காரர் இவ்வருடத்திலே அவைகளைப் பெருமளவில் செய்கைபண்ணியிருக்கின்ருர்கள். இந்தப்போகத்திலே ஒருலட்சம் புசலுக்குமேல் சிறுதானியவகைகள் யாழ்ப்பாணக்குடாநாட்டில் அறுவடையாகுமென மதிக்கப்படுகிறது. மரவள்ளிச்செய்கையும் இவ்வருடம் பெருமளவிலே இடம்பெற்றிருக்கிறது.

### தென்னைச்செய்கைக்குக் காணி

பரந்தன்—முல்லைத்தீவு வீதியையடுத்தபகுதியிலே மத்தியதர வகுப்பினருக்கான குடியேற்றதிட்டத்தின் கீழ் நிலம்வழங்குவதற்கென்று வருகிற கார்த்திகைமாதத்திலே காணிக்கச்சேரிஒன்று நடைபெறவிருக்கிறது. தென்னைச்செய்கைக்குமாத்திரமே அப்பகுதியில் நிலம்வழங்கப்படும். அங்கே நிலம்பெறுவதற்கென 3,000 பேர் மனுச்செய்துள்ளனர். ஏற்கனவே தெரிவுசெய்யப்பட்டுள்ள 500 பேரும் வருகிறதைமாதத்திலே நிலம் வழங்கப்படுவர். பாலாவி, பூநகரி, துணுக்காய்ப் பகுதிகளில் தென்னைச் செய்கைக்கு நிலம்வழங்கும்பொருட்டு ஏற்கனவே இருகாணிக்கச்சேரிகள் நடைபெற்றுள்ளன. இப்பகுதிகளில் நிலங்கேட்டு 1,700பேர் மனுச்செய்திருந்தார்கள்.

### சட்டவிரோதமாகக் குடியேறியவர்கள்

தென்னிந்தியாவிலிருந்து களவாகவந்து மன்னரில்குடியேறமுயன்ற பத்துப்பேர் சென்றவியாழக்கிழமை கைது செய்யப்பட்டனர். இவர்களைவிசாரித்தபோது, தங்களுடன் வேறும்ஆறுபேர் வந்ததாகவும், படகோட்டிகள் மூவர் தங்களைக் கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார்கள். இதனைத்தொடர்ந்துஅவர்களைக் காடுகளில்தேடிய பொலிஸ்சார்ஜன் தப்பியோடிய ஆறுபேரையும், படகோட்டிகள் மூவரையும் கைதுசெய்தார். விசாரணையின்பின் எல்லோரும் தலைமன்னர்க் குவறன்ரைன்முகாமுக்கு அனுப்பிவைக்கப் பட்டார்கள்.

### தினமும் 40,000 ரூபா நஷ்டம்

தனிப்பட்ட வான்களும், மோட்டார்க் கார்களும் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதாலே இலங்கைப் போக்குவரத்துச் சபை தினமும் நாற்பதினயிரம்ரூபாவை இழந்துவருவதாகச்சொல்லப்படுகிறது. அதனல், இந்தவான்களுக்கும், மோட்டார்க் கார்களுக்கும் ஆள் சேர்ப்பதைச் சட்டவிரோதமாக்கும் சட்டம்ஒன்றை விரைவிலே ஆக்கும்படியாகப் போக்குவரத்துச்சபைமந்திரியைக் கடிதம்ஒன்றின்மூலமாகச் சபை கேட்டிருக்கிறது. தற்போதுள்ள சட்டப்படி ஆள்சேர்ப்பதையிட்டுச் சாரதியில்மட்டும் வழக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழும்புரட்டாசிமாதம் 4-ந்திகதி வியாழக்கிழமை காலஞ்சென்ற தமதுஅருமைத்தந்தையாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்ருடிக்கொள்ளுமாறு வண. எம். மொரேசுவாமியார் தமதுசகோதர குருப்பிரசாதிகளையும், ஏனையோரையும் பரிவாகக் கேட்டுக்கொள்ளுகின்ருர்.

குத் தொடரமுடியுமாம். வான்களுக்கு ஆள்சேர்ப்பவர்கள் அவற்றின்சாரதிகள் அல்ல, அவர்கள் அமர்த்தியுள்ள காடையர்களேயென்று பொலிசர் இப்போது கண்டுபிடித்திருக்கிருர்கள்.

## கலை—கைப்பணிவிழா

யாழ்ப்பாணத்திலுள்ள கலை, கைப்பணிக்கழகம் சென்றஆண்டில்போலவே இவ்வருடமும் கலை, கைப்பணி விழாவொன்றைநடத்த முடிவுசெய்திருக்கிறது. இம்மாதம் 19, 20-ம் திகதிகளிலே இந்தவிழாவை யாழ்ப்பாண மத்தியகல்லூரி மண்டபத்திலே நடத்துவதற்கானஏற்பாடுகள்நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்திலுள்ள கல்விநிலையங்களும், மற்றும்பொதுஸ்தாபனங்களும் கலை, கைப்பணித்துறைகளில் அடைந்துள்ளமுன்னேற்றத்தை எடுத்துக்காட்டும்வகையிலே இவ்விழா நடைபெறும். கண்காட்சி, இசைநிகழ்ச்சிகளும் அதில்இடம்பெறுமென்றும் தெரியவருகிறது.

## தீவுபகுதியும் அம்புலன்ஸ்படகும்

தீவுபகுதியிலுள்ள பெரும்பாலான இடங்களிலே ஆஸ்பத்திரிவசதிகள் இல்லாமையால் அவ்விடங்களிலுள்ள நோயாளிகளை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்ல 'அம்புலன்ஸ்' மோட்டர்ப்படகு ஒன்று தந்துதவுமாறும், நெடுந்தீவுப்பிரயாணிகளின் பிரயாணவசதியை முன்னிட்டு "இராஜேஸ்வரி"என்ற மோட்டர்ப்படகை விரைவிலே அனுப்பி வைக்குமாறும் போக்குவரத்துமந்திரியைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணை இரண்டு சென்ற 9-ந்திகதிநடைபெற்ற நயினாதீவுக் கிராமச்சங்க மாதாந்தகூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியிருக்கின்றன

## உபசபாநாயகர் விலகினர்

பாராளுமன்றத்திலே கண்டிப் பிரதிநிதியும், உபசபாநாயகருமான திரு. பி. தென்னக்கூன் தமது உபசபாநாயகர் பதவியைச் சென்ற செவ்வாய்க்கிழமை இராசிநாமாச் செய்யலாயினர். தம்முடைய தொகுதி மக்களுக்கு மேலும் சிறந்தமுறையில் சேவைபுரியும் நோக்கமாகவே தாம் இராசிநாமாச் செய்ததாக அவர் தெரிவித்திருக்கின்ருர். நாளை வெள்ளிக்கிழமை இவரிடமாகப் புதிய உபசபாநாயகர் தெரியப்படவிருக்கின்ருர். தமிழ்மொழிமசோதா பாராளுமன்றத்தில் விவாதித்து வாக்கெடுக்கப்பட்டபோது, சபையிலேஇவர் சமூகமளிக்கவில்லை என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## வவனிக்குளமும் குடியேற்றவாசிகளும்

சமீபத்திலே வவுனிக்குளத்தில் போய்க் குடியேறிய யாழ்ப்பாணவிவசாயிகள் கூட்டங்கூட்டமாகச்சேர்ந்து உற்சாகமாக வேலைசெய்வதாலே மேட்டுநிலங்கள்வெகுவாகச்சீரடைந்து வருகின்றன. விவசாயிகள்பலர் குடிசைகள் அமைத்துக் கிணறுகளும் தோண்டியிருக்கின்றனர். சென்றசனிக்கிழமை அரசாங்கஉபஅதிபர் திரு. ஏ. தெட்சணமூர்த்தி அவர்கள்சென்று அவர்களின்வேலைகளைப் பார்வையிட்டு, அவர்களைப்பாராட்டலாயினர். இரண்டொரு வாரங்களிலே வாய்க்கால்களில் தண்ணீர்செல்வதற்கான வேலைகளை நீர்ப்பாசனதிட்டத்தைச் சேர்ந்தவர்கள் செய்யத்தொடங்கியிருக்கிருர்கள். குடியேற்றவாசிகளின் காணிகளுக்கு வேலியடைக்கத்தேவைப்படும் முள்ளுக்கம்பிகளை அரசாங்கம்வழங்கவிருக்கிறது.

# கன்னித்தாயே!

[வித்துவான் எஸ். தாமஸ் உடையார், தஞ்சை.]

மாசணுகாக் கன்னித் தாயே! — புவி
மாதரசே மரியாயே
தாசன் உனக்கொரு சேயே — எனைத்
தாபரித் தாண்டருள் வாயே.

●

ஆதர வற்றவர் துணையே! — தெய்வ
ஆண்டவ னைப்பெற்ற அன்னையே
மாதவி தன்அரண் மனையே — அருள்
வற்ருத பேரருட் சுனையே.

●

தாமரை யில்வளர் அனமே! — நறுந்
தண்டமிழ்க் காவிய மணமே
பூமணஞ் சேர்நந்த வனமே — உனைப்
போற்ற வரமருள் தினமே.

●

பழுது படாதொளிர் மணியே! — சென்மப்
பாவமில் லாச்செழுங் கனியே
எழுசுடர் வானவர்க் கணியே — அன்பாய்
ஏற்றருள் வாய்என்றன் பணியே.

●

உலகம் பசாசு சரீரம் — எனும்
உட்பகை யால்வரும் கோரம்
விலகப் புரிவதுன் பாரம் — அன்றி
வேறெனக் கில்லை ஆதாரம்.

ஐந்துகாயப் பிரான்சிஸ்குவின்

## மூன்ரும் சந்நியாச சபை

### மாத்தளை

இச்சபையின் வருடாந்தஞான வொடுக்கம் ஆவணிமாதம் 15-ந்திகதியன்று அடக்கவொடுக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்டு 22-ந்திகதியன்று இனிதே முடிவெய்தியது. யேசு சபையைச் சேர்ந்த வண. ரி. செல்வராஜ்சுவாமியவர்களால் புண்ணியவிருத்திக்கேற்ற முறையில் ஞானவொடுக்கபோதனைகள் செய்யப்பட்டன.

21-ம்திகதி பிற்பகல் 5மணியளவில் கண்டி மேற்றிராணியாரான மகாவந். பேர்ணுட் றெஞ்ஞோஆண்டவரவர்கள் விஜயஞ்செய்ய, முன்னேற்பாட்டின்படி யாழ்நகரிலே குருநகரைச்சேர்ந்த பி. செலஸ்தீன்என்பவருக்குச் சபையின் நவசந்நியாசஉடையளிக்கும் வைபவம் சிறப்பாய்நடந்தேறியது. அதில் மூன்றுகுருப்பிரசாதிகள், இருபது சந்நியாசசகோதரர்கள், நவசந்நியாசியின் பெற்ருர், சகோதரர்கள், உறவினர்களும், மற்றும் நூற்றுக்கதிகமான பக்தர்களும் பங்குபற்றிஆனந்தித்தனர்.

22-ந்திகதி காலை மேற்றிராணியாண்டவரால் நிறைவேறிய பாடற்பூசையின்பின் யாழ்நகரைச்சேர்ந்த சங். சகோதரர் சிங்காரயர், எவ். பி. எம். ஒரு வருட சந்நியாச வார்த்தைப்பாடு கொடுத்தார். திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது ஏனைய சந்நியாச சகோதரர்கள் தங்கள்வார்த்தைப்பாடுகளைப் புதுப்பித்தனர். இவ்வைபவம் முடிவடைந்ததும் சந்நியாசர்கள்யாவரும்சேர்ந்து ஞானவொடுக்க போதகருக்கு நன்றிசெலுத்தி அவரை வழியனுப்பிவைத்தார்கள்.

காலை 8மணியளவில் இச்சபையின் புதியசிரேஷ்டாதிபரையும், ஆலோசனைச்சபையாரையும் தெரிவுசெய்யுமாறு ஒருகூட்டம் நடந்தேறியது. அதற்கு மேற்றிராணியாண்டவர் தலைமைவகித்தார். அதில் சங். சகோதரர் ஈ. மேரியோசெவ் அவர்கள் புதிய சிரேஷ்டாதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். ஆலோசனைச்சபையினராகச் சங். சகோதரர் பிரான்சீஸ்சேவியர், சங். சகோதரர் எஸ். ரி. யுவான், சங். சகோதரர் [illegible] எஸ். போல், சங். சகோதரர் எல். கிளமென்ட் என்பவர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். ஈற்றில் ஆண்டவர்அவர்கள் அதிகாரிகட்குச் சிலபுத்திமதிகள்கூறி ஆசியளித்ததும், கூட்டம் இனிதேமுற்றுப்பெற்றது.

— நிருபர்

புத்தக மதிப்புரை

## சூழற் பயிற்சி

(மூன்ரும்வகுப்பு)

ஆசிரியர்கள்: திரு. க. பே. முத்தையா, திரு. ம. விக்ரர்.
பதிப்பகம்: அர்ச். சூசைமாமுனிவர் அச்சகம், யாழ்ப்பாணம்.
விலை: பிரதி சதம் 90.
கிடைக்குமிடம்: விவேகானந்த அச்சகம்—புத்தகசாலை, விவேகானந்தாக் கட்டடம், யாழ்ப்பாணம்.

பலதுறைகளிலும் மாணவர்கள் பரந்த அறிவு பெறுவதையே நோக்கமாகக்கொண்டு, அரசினர் பாடத்திட்டத்தை மேற்கொண்டு உருவாக்கப்பட்டுள்ள 'சூழற்பயிற்சி' எனும் பாடநூல் தனது குறிக்கோளுக்கிணங்க மாணவர்கள் பலதுறைகளிலும் பரந்தஅறிவைப் பெறத்தகும் சிறந்தமுறையிலே எழுதப்பட்டிருப்பக்கண்டு மகிழ்வெய்துகின்ரும். பத்தொன்பது பயிற்சிகளை அடக்கியுள்ள இதுகொண்டு பயிற்சியளிக்கப்படுமிடத்து, பத்தொன்பதுதுறைகளில் மாத்திரமல்ல, மற்றும்எத்தனையோ துறைகளில்மாணவர்கள்தேர்ச்சியடைவார்களென்பதை அனுபவவாயிலாகக் கண்டுகொள்ளலாம். சூழல் அறிவிலே, பொது அறிவிலே, உலக அறிவிலே மூன்ரும்வகுப்புப் பிள்ளைகள் தங்கள் வயதுக்கேற்ப வளர்ச்சிபெறச் செய்யவல்ல ஓர் புதையல்போன்ற இப்பாடநூல் சிறுவர்சிறுமியருக்கு அத்துணைபெரும்கவர்ச்சிகரமாய், அழகாய் வெளிவந்திருப்பது பாராட்டத்தக்கது. அனுபவம்படைத்த தமிழாசிரியர்கள் இருவரே ஆக்கித்தந்திருக்கும் இந்தச் சூழற்பயிற்சியைத்தமிழாசிரியர்உலகம் மகிழ்ந்து வரவேற்குமென்றே நம்புகின்ரும். நமக்கு அனுப்பிய பிரதிகளுக்காக நன்றிகூறுகின்ரும்.

## சிறியபுஷ்பமாகிய சின்னத் தெரேசம்மாள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கு விரைவில் அர்ச்சியசிட்டபட்டஞ் சூட்டியிருக்கிறது. அதுவும் தெரேசம்மாள் சொன்னவாக்கு. அதாவது, பாலியகோல ஞானச்சீவியத்தை உலகத்தவர்களுக்குப் படிப்பிப்பதே தனதுவிசேஷித்த அலுவல் என்றவாக்கு உண்மை என்பதற்கு வலிமையான ஒரு சாட்சி.

ஆதலால், தெரேசம்மாளின் தொண்டர்களே அவளிடமிருந்து பாலியகோல ஞானச்சீவியத்தைக் கற்றுக்கொள்ளப் பழகிக்கொள்ளுங்கள். பாலியர் தம்பெற்ரேரில் நம்பிக்கை வைப்பதுபோல நீங்களும் சர்வேசுரனில் நம்பிக்கை வையுங்கள். அந்த நம்பிக்கைக்கு அத்திவாரம் என்ன? அன்புதான் அத்திவாரம். ஒரு குழந்தை தன் தாயில் அவ்வளவு நம்பிக்கை ஏன் வைக்கிறது? தாயில்வைத்த அன்பினுற்ருன். தாய்தன்னில்வைத்த அன்பை அக்குழந்தை உணருகின்றது. உணர்ந்து தானும் தாயை நேசிக்கின்றது. நேசத்தினுல் நம்பிக்கைவைக்கின்றது. ஒரு குழந்தை தன்னைத் தன் பெற்ருர் அடைக்கலத்தில் ஒப்படைக்கும்பொழுது காண்பிக்கும் வேறு ஒரு லட்சணம் என்ன? அக்குழந்தையின் தாழ்மை. என்னுல் ஒன்றும் ஏலாது அம்மா, நீயே என்தஞ்சம் என்று சொன்னுற்போல அது தன் தாய்தகப்பனிடம் தன்னை ஒப்படைக்கின்றது. அவ்வாறே நாங்களும் தேவனைநோக்கிப் பிதாவே, நான் ஒன்றுமற்றவன், நான்பரம ஏழை, நீரே என்தஞ்சம், நீரேஎன் அடைக்கலம் என்று அவரிடம் தன்னை ஒப்படைக்க வேண்டும். இப்படித் தேவனில் பூரணநம்பிக்கை வைத்து அன்புடனும், தாழ்மையுடனும் அவருக்கு எங்களைக் கையளித்துத் தெரேசம்மாள் படிப்பிக்கும் பாலியகோலஞானச்சீவியத்திற் பயிலுவோமாக.

● ஐக்கிய அமெரிக்கதேசத்திலே பிரசுரமாகின்ற "லோன் ஸ்ருர்", "சண்டே விசிற்றர்" என்ற பிரபலகத்தோலிக்க தேசீயவாரச் சஞ்சிகைகள் அத்தேசத்திலே பப்ரிஸ்ற்சபை, மெதடிஸ்சபை, எபிஸ்கோபல் முதலாம் புரொட்டஸ்தாந்த சபைகளைச்சேர்ந்த 12,000பாதிரிமாருக்குச் சென்ற 1957-ம்ஆண்டுமுதல் இலவசமாக அனுப்பிவைக்கப்படுகின்றன. இவற்றிலே கத்தோலிக்கசமய விஷயமான செய்திகள், வியாக்கியானங்கள், விளக்கக்கட்டுரைகள் வாரந்தோறும் வெளிவருகின்றன.

* * *

● பாத்திமாநாயகியின் நீலச்செபமாலைப்படையணி சன்மானிக்கும் 1958-ம்ஆண்டுக்கான சர்வதேச சமாதானப்பரிசிலுக்குப் பிரான்ஸியஜனாதிபதியான எம். கோர்தி அவர்கள் தெரிவுசெய்யப் பெற்றிருக்கிருரென வாஷிங்ரன்நகரிலிருந்து அறிவிக்கப் பட்டிருக்கிறது. பிறசெல்ஸ்நகர உலகபொருட்காட்சியிலே சமீபத்தில்நடந்தேறிய நீலப்படையணியின் சர்வதேசமகாநாட்டின்போதே அவர் தெரிவுசெய்யப்படலாயினர். இந்தமகாநாட்டுக்கு 20தேசங்களிலிருந்துபோன 1,300 பிரதிநிதிகளுக்குமேல் சமூகமளித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாம் ஓர் கிறிஸ்துவர்தானு?

(முன் தொடர்ச்சி)

"நிசமாகத்தான் சொல்லுகிறேன்; எத்தவிதமானபங்கம் ஏற்பட்டபோதிலும், என்னவிதமான கொடியவாதை வேதனேக்குட்பட்டபோதிலும் கிறிஸ்து வேதத்தை நான் மறுதலிக்கப்போவதேயில்லே" என்று மார்த்தீனுள் காம்பீரமாகச் சாற்றியதைக்கேட்ட படைத்தலைவன் அவளேஓர்கால்ஏறவிறங்கமுறைத்துப்பார்த்துவிட்டு, "பிள்ளாய்! கேடுவரும்பின்னே, மதிகெட்டுவரும்முன்னே; உனக்குளெத்தனிதமும் உயிர்ப்பிச்சை பெற்றுத் தந்துவிடவேண்டுமென்று நானும் தவியாய்த் தவிக்கிறேன்; ஆனமட்டும் முயன்றுபார்க்கிறேன்; ஆனல், நீமிடித்தமுயலுக்குக் கால மூன்றேயென்று அழுங்குப்பிடியாய் நிற்கின்றாய்; இனிமேலென்னில் குற்றமில்லே; ஆனல், ஒன்றுமாத்திரம் சொல்லுகிறேன்; நீ கிறிஸ்துவேதத்தை மறுதலியாதேபோனல் உன்னேச் சிங்கங்களுக்குஇரையாகப் போடும்படி மன்னன் கட்டளேயிட்டிருக்கிருன்; அப்போதுஉன்கதி யாதாகுமென்பதை இப்போதே நன்ருகச் சிந்தித்துப்பார்; நீ உயிர்பிழைக்க வேண்டுமானல் ஒன்றில் கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடவேண்டும்; அன்றேல் கொடிய சிங்கங்களுக்கு இரையாகவேண்டியதுதான்" என வெட்டொன்று துண்டு இரண்டுஎன்றவாருய்அழுத்தந்திருத்தமாகக் கூறிநின்ருன்.

மார்த்தீனுள் இதைக் கேட்டதும் முதல்நாள்இரவு தமையனுக்கும், தனக்குமிடையே நிகழ்ந்தசம்பாஷணே நினைவுக்குவந்து, மனதைத் திடப்படுத்திக்கொண்டு, படைத்தலைவனே விழித்து, "கிறிஸ்துவேதத்தை மறுதலியாதகாரணமாகச் சிங்கங்களுக்கு இரையாக எறியப்படுவதையிட்டு நான் கிஞ்சித்தும் கலங்கப்போவதுமில்லே; தாம்எண்ணுவதுபோலப் பயந்து நடுங்கப்போவதுமில்லே; ரோமைநகரிலும், வேறிடங்களிலும் எத்தனேயோகிறீஸ்துவர்கள் சிங்கங்களுக்கு இரையாகத் தூக்கியெறியப்பட்டு வேதசாட்சிகளாகியிருக்கிருர்கள்என்று நான் அறிந்திருக்கிறேன்; அவர்களில்எத்தனேயோபேர் என்போன்ற இளம்பெண்கள்; அவர்கள் அஞ்சிப்பின்வாங்காத சிங்கங்களுக்கு நான்எதற்காக அஞ்சவேண்டும்?" என்று இளஞ்சிங்கம்போன்று மொழிந்தாள்.

இவ்விதம் சொல்லக்கேட்ட படைத்தலைவன் தனதுசம்பிரதாயம் மார்த்தீனுளில் பலிக்கமாட்டாதென்பதை நன்குணர்ந்தான். என்ருலும், மனம் பேதலியாது அவளேக்கடைசிமுறையாக ஓர்கைபார்க்கத்தான் வேண்டுமெனக் கருதியவனுய் அவளேப்பார்த்து, "பிள்ளாய், 'கெடுகுடி சொற்கேளாது; கொல்லும்நோய் மருந்தைக் கேளாது' என்றபடிதான் உன்பாடும் இருக்கிறது; 'மூர்க்கனும், முதலேயும் கொண்டதுவிடா' என்றவாருன உனது முரட்டுப் பிடிவாத குணத்தை இனியாவதுவிட்டுவிடு; அருமருந்தன்ன உன் ஆருயிரைக் காத்துக்கொள்ள இன்னும் காலம்பிந்திப்போகவில்லே; சிறுபிள்ளேத்தனமாய்நடந்து உன்சீரியவாழ்க்கையைச் சிதைக்கத் துணியாதே; கொடிய சிங்கங்களுக்கும், அரசனின் சீற்றத்துக்கும் பலியாகநினேயாதே; கடைசிமுறையாகச் சொல்லுகிறேன்; கிறீஸ்துவேதத்தை மறுதலித்துவிடு; அரசனின் தயவைப்பெறு; அப்போது நீ உயிர்மீண்டாய்; அன்றேல் மாண்டாய்" என்று நயபயமாக மொழிந்தான்.

படைத்தலைவனின் நயவஞ்சக மொழிகளேக்கேட்டமார்த்தீனுள் எட்டுணேயுமே அவற்றில் எடுபடாதவளாய் அவனேநோக்கி, "நான் சிங்கங்களுக்கோ, அரசனின்சீற்றத்துக்கோ அஞ்சப்போவதுமில்லே; கிறீஸ்துவேதத்தை மறுதலிக்கப்போவதுமில்லே; இது தான் எனது கடைசிவார்த்தை" என்று அழுத்தமாகமொழிந்தாள்.

அதுவரைநிகழ்ந்த வாக்குவாதத்தையும், மார்த்தீனுள் எதற்கும்விட்டுக்கொடாது அததுணேஓர்மத்துடன் கூறிய வீரத்துவபதில்களேயும் ஆர்வத்துடன் கேட்டுநின்ற தீயஸ்பிரபு ஆச்சரியவசத்தராய்த் தம்மைஅறியாமலே ஆனந்தக் கண்ணீர்பெருக, அன்புகடலாய்ப் பெருகத் தமது செல்வப்புதல்வியை இன்புடன்விழித்து, "மகளே! இன்று உனது வீரத்துவம் கண்டேன்; வீரமொழிகளேக் கேட்டேன்; உனது அருமைத்தந்தைக்கு இதிலும்பெரிய சந்தோஷமுண்டா? ஆம், நீ பாக்கியவதி! இல்லே, நீ சௌபாக்கியவதி! உன்னேப்போலும் ரூபவதிகளான இளங்கன்னியர்கள் எத்தனேயோபேர் உனக்குமுன்னதாகவே கிறீஸ்துநாதருக்கும், அவர்திருமறைக்கும் சாட்சிகளாகி—தங்கள்பிராணனேத் தியாகஞ்செய்து வேதசாட்சிகளாகி மோட்சமுடிபுனேந்து இன்று பரலோகபேரின்ப இராச்சியத்தை அலங்கரிக்கும் கன்னிகாஇரத்தினங்களாக இலங்கிக்கொண்டிருக்கும் அந்தஞானமனேகரகாட்சியை உனதுஞானக்கண்ணுல் ஓர்தரம் உற்றுநோக்கிப்பார்! அவர்களுடன்நீயும்சேர்ந்து மற்ருேர்ரத்தினமாகத் துலங்கப்போவதை ஊன்றி யோசித்துப்பார்! இதோ! உனக்குக் கிடைக்கப்போகும் வேதசாட்சி முடியையும், மோட்சமுடியையும் பற்றி எண்ணுந்தோறும் உனது தந்தை கொள்ளும் பரமானந்தம் பரலோக ஆனந்தமேயெனக்கூறி அப்பால் யாதும்பேச நாவெழாதவராய் நிற்கும்போது படைத்தலைவன் மிகவும் சீற்றங்கொண்டவனுய் "ஐயா! தங்கள் போதனே இம்மட்டும்போதும், போதும்! தமதுபேச்சை இம்மட்டில் நிறுத்தும், நிறுத்தும்! இனிமேல் கணநேரமும் பொறுக்கமாட்டேன்; பெண்ணே! புறப்படு; புறப்படு" என முழங்கினுன்.

சிறிதுவேளே எங்கும்நிசப்தமாயிருந்தது. இடிமுழக்கம்போன்று படைத்தலைவன் கூறியமொழிகளேக்கேட்டு எல்லோரும் திகைத்துநின்றனர். அப்பால் யாதும்பேச வகையறியாதவர் போல தீயஸ்பிரபு மகளே நோக்கிய வண்ணம் கண்ணீர் சொரிந்துநின்ருர். அவர்மனேவியோ தனதுஉதரக்கனியான மார்த்தீனுள் குரூரசிங்கங்களுக்கு இரையாகஎறியப்பட்டு அடையப்போகும் கொடியமரணத்தை நினேந்து கண்கள் இரண்டும் கலங்கிக் கண்ணீர்சிந்தி அழுதபோதிலும் தனது புதல்வியின் திறம்பாத திடவிசுவாசத்தைக்கண்டு ஆறுதல்அடைந்தவளாய், "என்நேசமகளே! சந்தோஷமாகச் சென்றுவா; உனதுபோராட்டத்தில் வெற்றிகண்டு வேதசாட்சிமுடி சூடும்படியாகத் தேவவரப்பிரசாதம் உன்மேல்இறங்குவதாக! திவ்விய யேசு உன்னேடிருப்பாராக" என்று அவளே உற்சாகப்படுத்தினுள்.

இந்தப்பரிதாபகாட்சியைப் பார்த்துநின்ற மார்த்தீனுளின் தமையனுன சீமோன் தனதுஅருமைத்தங்கைக்குப் பிரியாவிடைகூறும்நேரம் கடைசியாக வந்தபோது அவளுக்கும், தனக்குமிடையே முதல்நாளிரவு நடைபெற்ற சம்பாஷணேயின் ஞாபகம் மின்னலேப்போன்று தன்மனதில் வரவே, அவன் ஓடிச்சென்று அவளேக் கட்டித்தழுவி, இன்றுஉன்முறை; நாளேஎன்முறை; நாங்கள் வாயோரியாய்ச் சென்றஇரவு கூறியதுபோல் நீஇன்று சிங்கங்களுக்குஇரையாக எறியப்படவிருக்கிருய்; அவ்வாருயின் நாளேயதினம்நான் சிலுவையில் அறையப்படுவேனுக்கும்; தங்கைச்சி! தம்பியின் அடிச்சுவடுகளேப் பின்பற்றி நீ வழிநடந்துசெல்; உனது அடிச்சுவடுகளேப் பின்பற்றி நானும் தினம் உன் அண்ணு உன்னேப்பின்தொடர்ந்து வரவிருக்கையில் நீஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்" என்றுசொல்லி அவளேமுத்தமிட்டு வழியனுப்பினுன்.

(வளரும்)

# குருவானவரை அழைத்துவா!

— எஸ். பால்ராஜ், முசிரி —

மாலே மங்கிக்கொண்டிருந்தது. மாடப்புருக்கள் தத்தம்இல்லங்களுக்கு ஏகிக்கொண்டிருந்தன. மாதாகோவில் மணி மறையைமறந்த மக்களுக்கு நினேவூட்டுவதுபோல ஒலித்துமறைந்தது. அந்தஇருள்சூழ்ந்த நேரத்திலே, நாடி இழந்து, நரம்புகள்தளர்ந்து, சாவின் படுகுழியின் படிக்கட்டுகளேத் தாண்டிக்கொண்டிருந்தது ஓர்வயதுமுதிர்ந்த மனிதஉருவம்.

அந்தஉருவத்தின் உடலிலேதெளிவு இல்லே. உழைத்துஉளுத்துப்போன கட்டையாகப் படுக்கையில் அசைவற்றுக் கிடந்தது. பக்கத்திலிருந்த திருஇருதயப்படமும், எரிந்தமெழுகுவர்த்தியும் பார்ப்பவர்களுக்கு அவர் ஓர்கிறீஸ்துவன்என்பதை எடுத்துக்காட்டின. அவர்பக்கத்தில் 16வயதுள்ள ஓர்வாலிபன் கண்களில்கண்ணீர்வடியத் துக்கம் தோய்ந்தமுகத்தினனுய்ச் சிற்பிவடித்த சிலேயென அமர்ந்திருந்தான். அவன் கண்களில் வழிந்தகண்ணீர்த்துளி தகப்பனின் உலர்ந்தஉடலில் விழுந்தது. அவன் வீறுகொண்டவனுய் 'அப்பா' என்ருன். அந்த அமுதச்சொல்லில் ஆயிரமாயிரம் எண்ணங்களும், ஆவேசங்களும் வெளிப்பட்டன. அப்பா, நான் பெரியவனுகவேண்டும்; படித்துப் பட்டம்பெறவேண்டும்; பெரும் பதவிஏற்கவேண்டும்; பொருள்சேர்க்க வேண்டுமென்று இரவும்பகலுமாகப் பாடுபட்டதுசரி. அத்துடன்நில்லாமல், கணக்கிலடங்காத ஏழைகளே வாட்டி வருத்தி அற்பபொருளுக்காக உங்கள் பொன்னுன வாழ்க்கையையும் சீரழித்துக்கொண்டீர்கள். நமதுமெய்ம்மறைச் சத்தியங்களேயும், அதன்கட்டளேகளேயும்புறக்கணித்து அஞ்ஞானவழியினேப் பின்பற்றிப் பணமே குறிக்கோளென உழைத்தீர்கள். தாங்கள் இன்று அனுபவிப்பது என்ன? பணமா? குருமாரைப் பழித்தீர்களே குருடர்களென்று. இன்று குருடாயிருப்பது யார்? தவறியநேரங்களில் என்னேத்தண்டித்து நல்வழியில் என்னேவளர்த்த என் தாயைத் தடிகொண்டு அடித்தீர்கள். அதன்ஆக்கினேயைப் பார்த்தீர்களா? சொல்லுங்களப்பா! சொல்லுங்கள். இதோ! தாங்கள்தேடிவைத்த சொத்து. தூக்கிச்செல்லுங்கள். உங்களால் முடியுமா? விழித்தார்பெரியவர். கண்கள் நீர்ச்சுனேயாகமாறின.

அப்பா! சிறுவன்யான் தங்களுக்குத் திருச்சபையின் அனுஷ்டானங்களே நினேவூட்டியதற்காகப் பட்டஉதைகள் கொஞ்சமா! அவைகளே நான்மறந்தேன் அப்பா. இதோ, தங்கள்பாதத்தில் விழுந்துகெஞ்சுகிறேன். 'குருவானவரை அழைத்துவா' என்று சொல்லுங்கள். 'மனந் திரும்பிவிட்டேன், மன்னிப்புப் பெற்றுக்கொள்ளுகிறேன்' என்று கூறுங்கள். அப்போது நான் என்கடமையைச் செய்தவனுவேன் அப்பா!

தந்தையின் நெஞ்சு விம்முகிறது. கண்ணீர் சொட்டுகிறது.

அப்பா, பாவச்சகதியில் மதலேனுளேப்பாரும்! அவள் மன்னிப்புப்பெறவில்லேயா? யேசுவின்பால் பற்றுக்கொண்டு மன்னிப்பையடைந்த நல்ல கள்ளன் அன்றே பரலோகம்போகவில்லேயா? யேசுவின்இரக்கத்தில் உங்களுக்கு ஐயமா? இதோ, பரலோக இராக்கினியாம் நமது தேவஅன்னே நீர் திரும்பிவர வேண்டுமென்று ஏங்கிக்கொண்டிருக்கிருள். அப்பா! எனக்கு உங்கள் சொத்துவேண்டாம். வீடு வேண்டாம். நீங்கள்தான்வேண்டும், உங்கள்ஆத்துமமே எனக்குவேண்டும்.

பெரியவர் தான்செய்தகொடுமைகளே நினேந்து கட்டிலேநனேத்தார். பச்சாத்தாபத்தால்கண்ணீர்சொரிந்தார். சிறிது நேரமௌனம். 'மகனே, நீ உத்தமன். மகன் தந்தைக்குஆற்றும் நற்பணியை இன்றே நீஎனக்குச் செய்தாய். குருவானவரை அழைத்துவா. என்பாவச் சுமை குறைந்தது. நான் மோசடி செய்து குவித்தசொத்தைக்கொண்டு ஓர் அனுதைவிடுதி கட்டு. எளியமக்கள் வாழட்டும், என்வரலாற்றை எடுத்தோதுமசான்ருக என்போன்ற ஒரு சிலேயைச் செய்துவை. அதைக்கண்டு பலர் திருந்தட்டும்.

குருவானவர்வந்தார். மனஸ்தாபத்துடன் பாவசங்கீர்த்தனஞ் செய்தார் பெரியவர். தகப்பன் தன்பாவங்களே எண்ணிக் கண்ணீர்சொரிந்தார். மகன் அதைக்கண்டு ஆதனந்தக்கண்ணீர் வடித்தான். குருவானவர் அவஸ்தைப்பூசுதல் கொடுத்தார். இறுதிவேளே சொல்லும்செபங்களேச் சொன்னர். "யேசுவே! என்னே இரட்சியும்; மரியாயே! என்னேத் தற்காத்தருளும்!" என்ற வார்த்தைகளோடு கண்களேமூடினுர் பெரியவர்.

வாலிபன் தன்தந்தையின் ஆத்துமத்துக்காக எத்தனேயோ செபங்கள்செய்தான். ஒறுத்தல்கள்செய்தான். ஒன்றும் வீணபோகவில்லே. தனதுகடமை இன்ருகிலும் முடிந்ததேஎன்பதை நினேந்து உள்ளத்தில் இன்பங்கொண்டான்.

## தேவதாயாரின் ஜனன மகோற்சவம்

நேரியகுளம்

நேரியகுளத்தில் பண்டைப்பெருமையுடன் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கும் பரிசுத்தகப்பலேந்திமாதாவின் ஆலயமகோற்சவம் நிகழும் புரட்டாசிமாதம் 5-ந்திகதி ஆரம்பமாகி 7-ந் திகதி ஞாயிறுவாரம் முடிவாயிற்று. ஆலயபலிபீடம் "மரியாயே வாழ்க" என்னும் சுலோகம்தாங்கிநிற்க, இயற்கை, செயற்கைமலர்களால் அலங்கரிக்கப்பெற்று அழகுற்று விளங்கியது. சனிவாரம் சாயந்தரம் 7மணிக்குச் செபமாலே, பிரசங்கம்முடிந்தபின் எமது கட்டளேக்குரவர் ஏ. மூஜேசுவாமியவர்களால் மாலேயாராதனேபாடப்பெற்றுத் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம்அருளித் திருச்சுரூப எழுந்தேற்றமும் செய்யப்படலாயிற்று. மகோற்சவதினமன்று ஆலயமணி ஆர்ப்பரிக்க, வாத்தியம்முழங்க, விசாரணேப்பங்கைச்சேர்ந்த கிறீஸ்துவர்களும், பாடசாலே ஆசிரியர்களும், மாணவர்களும், பிறசமயமக்களும் பெருந்திரளாகச் சமுகமளிக்க, கோவில்மூப்பர் சந்தியாப்பிள்ளே அவர்களின் வீட்டிலிருந்து சந்திப்புகள்கொண்டு சென்று குரவர்அவர்களுக்கு அன்பளிப்புச்செய்து, ஆழ்ந்தநன்றிதெரிவித்து ஆசிபெறப்பட்டது. 8மணியளவில் பெரியபாடற்பூசை ஆரம்பமாகிச் சுவாமியவர்களால் தேவதாயாரது பிறப்பின்மகிமையைப்பற்றிச் சிறந்த பிரசங்கம் ஒன்று செய்யப்பட்டது. பாடசாலேஆசிரியரும், மாணவரும் கீதமிசைத்தனர் பூசைவேளே. பாடசாலே மாணவர்சிலருக்கு முதல்நன்மைவழங்கப்பெற்றது. மக்களும் பெருந்திரளாகத் தெய்வீகவிருந்தருந்தித் தமது கோவில் மகோற்சவத்தை அத்துணே சிறப்பாகக் கொண்டாடியதையிட்டு மகிழ்ச்சியடைந்தார்கள். சாயந்தரம் வழங்கப்பெற்ற அன்னதானத்துடன் ஆலயவருடாந்தஉற்சவம் சிறப்பாக முடிவுற்றது.

— நிருபர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



**அருமைச் சகோதரங்களே !**

போர்மோசாதீவில் இருப்பவர்பலர் மெய்வேதத்தை அறியாதவர்கள். மீன்பிடிப்பது அவர்களது தொழில். மாற்சு தங்களது வான அன்னை எனவும், அவள்தான் தங்களது தொழிலை அனுகூலமாக்குபவள் எனவும் எண்ணினர்; எண்ணி வணக்கஞ் செலுத்த விரும்பினர். எனவே, தங்கள் பட்டணத்துக்குத் "தேவ அன்னை" எனும் கருத்துப்பட "ரியென்மு" எனப் பெயரிட்டனர்.

அண்மையில் அழகும், கருத்தும் நிறைந்த சுரூபம் ஒன்றை அப்பட்டணத்துப் பூங்காவில் அமைக்கும்படி பட்டணஅதிகாரிகள் மக்களைக் கேட்டுக்கொண்டனர். ரியென்முவிலிருந்த பங்குக்குரு யோண் ஹெரிகெர்ஸ் சுவாமிகளும், கத்தோலிக்கரும் எமது மரியன்னையின் சுரூபம் ஒன்றை நிறுவும்படி ஆலோசனை கூறினர்.

பட்டண அதிகாரிகள் ஆலோசனையை ஒப்புக்கொண்டனர். ஆகவே, ஹெரிகெர்ஸ் சுவாமியார் நந்தாவனத்தில் நிறுவுவதற்கென அமலஉற்பவ அன்னையின் சுரூபமொன்றைத் தயார் செய்கிறுர்.

கருத்தற்ற வான தேவதைக்குப் பதிலாக மக்களது உண்மை மாதாவான மாசற்ற மரிஅன்னைக்கு மதிப்புக் கிடைக்கிறது. போர்மோசாவில் திருச்சபை வளர்ச்சியடைகிறதற்கு அது அடையாளமுமாகிறது.

அண்ணு.

—*—

# வீரனைப் பயின்ற வனிதை

(சென்றவாரத் தொடர்ச்சி)

"நுவறெுட் குருவானவர் என்மனதைக் கவிந்திருந்த சந்தேகக் கருமேகங்களை ஓட்டியதன்பயனுக என்விசுவாசம் உறுதிபெற்றது. கடவுளை முன்னிட்டு மனதிற்கு அமைதி கொடுக்கும் உண்மையைப்பரப்புவதில் எனதுவாழ்நாளைச் செலவிடுவதுஎன்று பிரதிக்கினை பண்ணினேன்" எனப்பின்பு பிறடெறிக் கூறினுர். அன்றே பொய்த் தத்துவங்களைக் களைந்து பிரான்சை உண்மை மார்க்கத்துக்குக்கொண்டுவரும்பணியொன்று உதயமாயிற்று

**சந்தேகத்தைஓட்டும் மதம்**

பதினுறும்வயதில் படிப்புகளை முடித்து வழக்கறிஞர்ஒருவரின் கந்தோரில் சட்டப்படிப்புக்காக விடப்பட்டார். ஓய்வுநேரங்களில் ஆங்கிலம், ஜேர்மன், சமஸ்கிருதம், எபிரேயம்ஆதியாம் மொழிகளைக் கற்றுர்.

"சந்தேகம்எனும்நீர்ச்சுழியிலிருந்து தப்புவதற்கு உறுதியானதொன்றைத் தேடினேன். உறுதிதருவது கத்தோலிக்கமதம் எனஅறிந்ததும், என் உள்ளத்தில் அமைதியும், ஆனந்தமும் குடிகொண்டன. கத்தோலிக்கமதத்தைஎனக்கு முதல்கற்றுத் தந்தவள் என்அன்னை. அம்மதத்திற்கு விஞ்ஞானம் தூண். ஞானம் விளக்கு. அழகும், மகிமையும்பொருந்திய மாளிகை அது. வாழ்க்கைக்கடலில் திசைஅறியா மரக்கலம்போலத் தத்தளிப்பவருக்குத் திருச்சபையைக் கலங்கரை விளக்கமெனக்காட்ட விழைகிறேன்" என நண்பர்ஒருவருக்கெழுதிய கடிதத்திற் கூறுகிறுர்.

அந்நோக்கத்தை மனதிற்கொண்டு இருஆண்டுகளின்பின் தமது சட்டப்படிப்பைத் தொடர்ந்துநடத்தப் பரீசுக்குவந்தார். அங்குகண்ட உலகப்போக்கு அவர்மனதைச் சோர்வடையச் செய்தது. வீட்டுக்கவலையும் கூடஇருந்தது. அந்நிலையில் அன்னைக்கு ஒருகடிதம் எழுதினுர். "என் மனதிலுள்ள கவலையைக்கூறக் கடவுளும், நீங்களும்மாத்திரம்...... அறிவைத்தேடுவதும், கத்தோலிக்க வாழ்க்கையை வளம்பெறச் செய்வதுமே என்ஆறுதல்."

சோதனைகள்பல அவரைச்சூழ்ந்திருந்தாலும், தூரத்திலிருக்கும் அன்னை தன்னைக்காவல் செய்கிறுள் எனஉணர்ந்தார். பெயர்பெற்ற பௌதிகசாஸ்திரி அந்திரே அம்பேர் வீட்டில் அவருக்கு விடுதிவசதி கிடைத்தது தெய்வச்செயலேஎன்று உணர்ந்தார். அம்பேருடைய விசுவாசம் பிறடெறிக் குடைய "காதல் காய்ச்சலை" மாற்ற உதவியதுஎனவுங் கூறியிருக்கிறுர்.

**சமயவாதி**

சர்வகலாசாலையிற் பரந்திருந்த அஞ்ஞானத்தைத் தொலைத்துவிட ஏதாவது செய்யவேண்டுமெனத் துணிந்தார். ஏனெனில், பல்கலைக்கழகப் பேராசிரியர்தாமே கிறிஸ்து சமயத்தைஎதிர்த்துப்பேசுபவர். அங்குள்ள கத்தோலிக்க மாணவர் சிலரைத் தன் தோழர்களாக்கினுர். அவர்களைக்கொண்டு எதிர்பேசிப் பேராசிரியருக்குக் கண்டனக்கடிதம் எழுதச்செய்தார். பேராசிரியர் பணிந்து பொதுமேடையில் மன்னிப்புக் கோரினர். அவர்களுள் தத்துவசாஸ்திர விரிவுரையாளர் யுவ்ரேயும் ஒருவராவர்.

அத்தகைய வெற்றியைக்கண்டு ஆனந்தங்கொண்ட வேறுகத்தோலிக்கர் பிறடெறிக்குடன் சேர்ந்தனர். தமதுமுயற்சிக்குத்திட்டம் வகுக்கப் பெய்லி என்பாருடைய கந்தோரில்கூடுவர். இலக்கியக்கழகமும், அதன் கத்தோலிக்க பிரசுரத்தின் அதிபரும் பெய்லி அவர்களேயாவர். கத்தோலிக்க சேவைக்கு வழியாகும் பொருட்டு அக்கழகத்தைச் "சரித்திரக் கழக"மாக மாற்றினர். அது ஓர் விவாதச்சபை. எவரும் அங்கத்தினராகச் சேரமுடியும். நாஸ்திகரும் இடம்பெற்றனர். அறிவும், வாய்ச்சாலமும் உள்ள பிறடெறிக்கிற்கு அது மிகவும் பிடித்தமாயிருந்தது.

வாதமும், பிரதிவாதமும் மனங்களைக் கிறிஸ்துபக்கமாகத் திருப்பவில்லை எனக்கண்டு வேறுஉச்சித கைங்கரியங்களைப்பற்றி யோசித்தார். லோகாயதர் பரீஸ்மாநகரில் உள்ளமிகுந்த இல்லாண்மையைச் சுட்டிக்காட்டி, "முற்காலத்தில் கிறிஸ்துவேதம் அற்புதங்களைச்செய்திருக்கலாம்; ஆனுல், அது இப்பொழுது உயிரற்ற கட்டையாகி விட்டது. உங்கள் விசுவாசத்தைக் காட்டக் கிறீஸ்துவர்களே யாது செய்கிறீர்கள்? எமக்குச் சிலுசிலுப்பு வேண்டாம்; பணிகாரமே வேண்டும்" என அட்டகாசம் செய்தனர்.

இத்தகைய கேலிப்பேச்சைக்கேட்ட பிறடெறிக்மனதிற் கவலைமிகுந்து செய்வதுயாதெனச் சிநேகிதர் ஒருவருடன் ஆலோசித்தார்.

(வளரும்)

—*—

# மாணவர் கடன்

நல்லவை கெட்டவை நாளும் கணிப்போம்
அல்லவை செய்தல் அறவே ஒழிப்போம்
சொல்லதில் பொய்ம்மையை என்றும் தவிர்ப்போம்
கல்வியில் ஊக்கம் காட்டிச் செழிப்போம்.

அன்பும் அடக்கமும் நெஞ்சிற் பதிப்போம்
இன்பம் சுரந்திடுஞ் சொற்கள் உரைப்போம்
துன்பஞ் சகித்துத் தூய்மை வளர்ப்போம்
என்பும் பிறர்க்கே ஈயத் துடிப்போம்

பெற்றேருடன் பெரியோரை மதிப்போம்
கற்றேரை நாடிக் கலைகள் படிப்போம்
வெற்றியும் வீரமும் கண்டு களிப்போம்
நற்பரன் யேசுவை நாளும் துதிப்போம்.

'சில்லையூர்' — இம்மனுவேல்

—*—

# மாய மாலை

மேரிக்கு அன்றுதினமே அந்தமுத்துமாலையை வாங்கிக் கொடுத்தார் அவள்தாயார். என்ன அழகான மாலை! மேரிக்கும் அதற்கும்தான் எவ்வளவு பொருத்தம்! அதை அணிந்த மேரியின் ஆனந்தத்தைக் கேட்பானேன்? ஆயிரம் தடவை கண்ணுடியில் தன் அழகைப் பார்த்திருப்பாள். ஆசை அடங்கவில்லை. தோழியருக்குக் காட்டுவதற்காக வீதிக்கு ஓடினுள்மேரி. பிள்ளைகள்பலர் கூடினர். மேரியுடன் துள்ளிவிளையாடினர். எங்கெங்கோ ஓடினர், பாடினர், ஆடினர். இவற்றில் ஈடுபட்ட மேரி மாலையை மறந்தே போய் விட்டாள். வீட்டிற்குச் சென்று நிலைக் கண்ணுடியில் தன்னைப் பார்த்தபொழுதுதான் மாலையின் ஞாபகம் வந்தது. கண்ணுடியில் தன் கழுத்தைப் பார்த்தாள். மாலை காணப்படவில்லை. கையாற் தடவிப்பார்த்தாள், மாலை இல்லை. எங்கே தேடுவாள்? என்ன செய்வாள்? பாவம்! மாலையைக்கண்டுமகிழ்வுற்ற மேரி அது மாயமாய் மறைந்துவிட்டதால் மனச்சோர்வுற்ருள். இன்பம் துன்பத்தின் முன்னறிவிப்பல்லவா? "மாலை எங்கே" என்று தாயார்கேட்டபொழுது அது பெட்டிக்குள் இருப்பதாகச் சொன்னுள், பொய்சொல்லி அறியாதமேரி.

ஆனுல், அவளுக்கு ஒரே ஒரு நம்பிக்கை; அந்தமாலை தேவமாதாவால் தனக்கு எப்படியும் கொடுக்கப்படும் என்பதுதான். இரவுமுழுவதும் மாதாவைவேண்டினுள் மேரி. "அன்னை மரியே! உன் அன்பானமகள் வேண்டுகிறேன். என் மாலையைத் தந்துவிடுந் தாயே. அம்மா என்னை அடிப்பார்." இதுதான் அவளின் வேண்டுகோள். விடிந்ததும் பனி என்றும் பாராமல் மாதாகோவிலுக்குச் சென்ருள்மேரி மாலை கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன். நம்பிக்கை கைகூடிற்று. அந்த மாயமாலை, மாதாவால் கொடுக்கப்பட்ட மாலை, மேரிக்கு ஓர் மணியும் நட்பாகியது. மணி என்பது நற்குணமே உருவெடுத்த சிறுவன் ஒருவனின் பெயர்.

மாலையின் மர்மம் என்ன? மாய மாலை எப்படி மாதாவிடம் வந்தது? கோவிலில்மேரி தேவதாயின் சுரூபத்துக்கு அருகில் முழந்தாளில் இருந்து "மரிஅன்னையே! மாலையைத்தாரும்" என்றுகனிவுடன் வேண்டினுள். அது அருகில் நின்ற கட்டளைச்சுவாமியாரின் செவியில் பட்டதும் அவர் மேரியின் முத்துமாலையை அவளிடம் கொடுத்து அவளின் தேவபக்தியைப் பாராட்டினுர். குருவானவருக்கு மாலை எப்படிக் கிடைத்தது.

மேரி விளையாடும்போது கழன்று விழுந்த மாலையை ஒருவரும் கவனிக்கவில்லை. அது வீதியோரத்தில் கிடந்தது. அவ்வழியால் வந்த சிறுவன் ஒருவன் அதைக் கண்டெடுத்தான். அது மேரியின் மாலை என்பது அவனுக்கு எப்படித் தெரியும்? அவன் அதைச் சுவாமியாரிடம் கொணர்ந்து கொடுத்தான். அவன் பெயர் தான் மணி. சுவாமி வளர்த்த அனுதைப் பையன்.

மாலையைப்பெற்ற மேரி ஆனந்தத்தால் தலை கால் தெரியாமல் துள்ளிக் குதித்தாள். மாதாவின் மகிமையை நினைந்து மனம் மிக மகிழ்ந்தாள். ஆனந்தமிகுதியால் அங்கேயே மூர்ச்சித்துவிட்டாள். அங்கு வந்த மணி அவளின் ஆயாசத்தைத் தீர்த்து மேரியின் வீட்டிற்கு அழைத்துச் சென்ருன். மேரி நடந்த யாவற்றையும் பெற்றேருக்குச் சொன்னுள். அவர்களும் மாதாவை மனமாரப் புகழ்ந்தனர்.

மேரியும், மணியும் வீதிக்குச்சென்றனர். அங்கே தோழர்கள் கூடினர். மேரி,

"மாயமான மாலை—மாதா தந்த
மாலை
மகிழ்ச்சியோடு அணியும்—மகிமை
உள்ள மாலை
மணியின் நட்பை எனக்கே—மகிழ்ந்
தளித்த மாலை"

என்று பாடினுள். மணி உட்பட எல்லோரும் ஆடினுர்கள்.

—கரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாட்டி (வேலணை) சிந்தாத்திரை மாதா திருநாள்

புரட்டாசி 15-ம்நாள் ஆரம்பமாகி 24-ம்நாள் சுற்றுப்பிரகாரத்துடன் முடிவாகும்.

லூர்துபதியில் மரியன்னை தரிசனை தந்த நூற்றாண்டுநிறைவு விழாவையிட்டு விசேஷநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இப்புனிததலத்தில் 20-ம்நாள் தொடக்கம் 23-ம்நாள்வரை தியான நாட்களாக அனுசரிக்கப்பெறும்.

அதிவண. Z. N. குருஸ் O. M. I. சுவாமிகள் ஞானொடுக்கப் போதகஞ் செய்வார்கள்.

கட்டளைக்குரவர்,
மண்டைதீவு, விசாரணைப்பங்கு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்

இல. M. B. 1133

வலிகாமம் கிழக்கு விளைபொருள்உற்பத்தி விற்பனவு ஐக்கியசங்கம் நீர்வேலி
அதன் அக்கிராசனர் புத்தூர்
கே. சிவகுரு — வழக்காளி.

எதிராக
புத்தூர் கிழக்கு
சிற்றம்பலம் நடராசா — எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1133-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு ஐப்பசிமாதம் 22-ந்திகதி புதன்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,127-உம், இன்னும் ரூபா 1,010 சதம் 82-க்கு 31-7-56 தொடக்கம், 11-12-56 வரையும் 100-க்கு 4%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 5%வட்டியும் கோட்டுச்செலவு 192ரூபா 25சதமும்.

### காணிவிபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் வலிகாமம்கிழக்குப்பகுதி புத்தூர்கோயிற்பற்று, புத்தூர் வடக்குஇறை தீறைதோட்டம் ப. நி. இ. 52-உம், அதற்குச்சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — மழவராயர் கந்தையாவின் உரிமைக்காரரின் காணி. வடக்கு — சங்கரப்பிள்ளை தில்லைநாதர் கைம்பெண் தங்கத்துக்கும், மறுபேருக்குமுரிய காணி. மேற்கு — சிற்றம்பலம் சிவசம்பு பெண் மங்கையற்கரசியின் உரிமைக்காரரின் காணி. தெற்கு — சங்கரப்பிள்ளை தில்லைநாதரின் உரிமைக்காரருக்கும், பங்காளருக்குமுரிய காணி. இதடங்கலும்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 15-9-58

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் அருளினால் நான்கேட்டுக்கொண்ட பிரகாரம் எனக்கு வேலைகிடைத்தமையினால், பரிசுத்த தேவஅன்னையின்புகழ் எங்கும்பரவும்நோக்குடன், நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததையிட்டு மன்னிப்புவேண்டுகிறேன்.

எம். ஞானப்பிரகாசம்
மட்டக்களப்பு

* * *

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் உதவியினால் என்வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கி, எனக்கு வேலைகிடைத்தபடியால் சதாசகாயமாதாவுக்கு ஸ்தோத்திரமாய் நேர்த்திப்படி இதைப் பிரசுரிக்கிறேன். பிரசுரிக்கத் தாமதித்ததையிட்டுத் தாயிடம் மன்னிப்புவேண்டுகிறேன்.

மி. அருளப்பு
மட்டக்களப்பு

# "எந்தமனுஷனால் இடறல்வருகிறதோ......"

(சி. எஸ். நாயகம் — பத்தாவத்தை, இளவாலை)

வேதத்திலே "மனுஷன்" என்னும் சொல் மனுக்குலத்தையே — ஆண், பெண் இருபாலாரையுமே சரிவரக் குறிப்பதாகும். உதாரணமாக, 'மனிதா! இதோ நீ மண்ணாயிருக்கிறாய்; திரும்பவும் நீ மண்ணாய்ப்போவாய்" (ஆதி. 3: 19.) என்றுதேவன் ஆதாமுக்கு இட்டசாபம் தனியஆதாமை மாத்திரமல்ல, ஏவாளையுமே சரிவரப் பாதிப்பதாகும். இல்லையேல், ஆதாமைப்போல் ஏவாளும் இறந்துபட்டு மண்ணுக்கிரையாகவேண்டிய அவசியமில்லை. அன்றியும் இந்தச்சாபத்தீடு தனியஆதாமையும், ஏவாளையும்மாத்திரம் பாதிப்பதன்று. அவர்களின் சந்ததியாராகிய ஆண், பெண் இருபாலாரையுமேகொண்ட உலகமக்கள் அனைவரையுமே பாதிப்பதாகும். ஆனபடியாற்றான் மண்ணுலகிற் தினமும் எத்தனையோ ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் மரணத்தின்வாய்ப்பட்டு மண்ணுக்கிரையாய்-மண்ணோடு மண்ணாய்ப்போவதை நாம் கண்ணாரக் கண்டுங்கேட்டும் வருகிறோம். இது உலகமுடிவுபரியந்தம் நீடித்திருக்குமென்பது தப்பாது. ஆகவே, "எந்த மனுஷனால் இடறல்வருகிறதோ..." என்ற வேதவாக்கியமானது "எந்த மனுஷனால் அல்லதுமனுஷியால் இடறல்வருகிறதோ..." என்ற அர்த்தத்திலே பொருத்தமாக நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்என்பதை மனதில் நன்குபதிப்போமாக! இனி, "இடறல்" என்னும்சொல்லில் இறங்குவோம்.

"இடறல்" என்பது இங்கே துன்மாதிரிகையைக் குறிப்பதாகும். ஒருவர் பாவத்திலே கமலகுண்டலமாய் வழுக்கிவிழுந் தெழுப்பவோ, அன்றேல் விழுந்தெழும்பவியலாது அழிந்தொழியவோ "துன்மாதிரிகை" ஆத்துமத்துக்கு ஓர்பயங்கர சறுக்குநிலம்போல் இருக்கின்றது. அம்மட்டா! அநேகர் பருகும் சுத்ததண்ணீர்ப் பாத்திரத்தில் ஓர்துளிநஞ்சு எவ்வாறோ, அவ்வாறே "துன்மாதிரிகை" என்னும்பாவம் ஒருவரது ஆத்துமத்தின் ஞானஉயிரை மாத்திரமல்ல, எத்தனையோஆத்துமங்களின் ஞானஉயிரைக்கொல்லும் சக்திவாய்ந்த "பாஷாண" மாயும், எத்தனையோ ஞானஉயிர்களை ஒருங்கேகொன்றழிக்கும் கொடிய "நச்சுப்புகை" யாயும் இருக்கின்றது. துன்மாதிரிகையிலும் எத்தனையோவகை உண்டு. சிலர்ஆங்காரத்தில் — சிலர்குடிவெறியில் — சிலர்காய்மகாரத்தில் — சிலர் கோள்குண்டணியில்— சிலர்துன்மார்க்கத்தில்— சிலர்காமாதுரத்தனத்தில்— இன்னும்சிலர் மற்றும்சிலவற்றில் துன்மாதிரிகையாயிருக்கலாம். எவ்வகைப் பாவத்திலும் துன்மாதிரிகை ஆத்துமத்துக்கு மிகவும் அபாயகரமானதே. அதனாற்றான் இத்தகைய இடறல் அல்லது துன்மாதிரிகை பூமுகத்திலே இல்லாதொழிந்துபோகவேண்டுமென்று தேவன்சித்தமாயிருக்கிறார்.

எத்தனையோ வகையான பாவிகள் மேல் கிறிஸ்துநாதர் இரங்கி அவர்களுக்கு மன்னிப்பருளினார். ஆனால், இடறல் அல்லது துன்மாதிரிகைகாரர் மேலோ அவர் இரங்கி அவர்களுக்கு மன்னிப்பருள்வில்லை. எத்தனையோ விதமான பாவிகள் அவரது கண்டனைக்கும், தண்டனைக்கும் உள்ளானார்கள். ஆனால், அவரின் துவேஷத்துக்கும், முனிவுக்கும், சாபத்துக்கும் உட்பட்ட பாவி இடறல்—அதாவது துன்மாதிரிகைக் காரனைப்போல் ஒருவனுமில்லை. துன்மாதிரிகைக்காரன் அவர் கண்ணில் எத்துப்படக்கூடாது. ஏனெனில், அவன் தனது ஆத்துமத்தை மாத்திரமல்ல, இன்னும் எத்தனையோ ஆத்துமாக்களையும் இரையாக்கும் பிசாசாயிருக்கிறான். துன்மாதிரிகைக்காரர் ஓநாய்களைப் போல் பிசாசுகளின் தூதர்களாய்ப் பிறர் ஆத்துமங்களுக்கு அத்துணை பொல்லாப்புநிறைந்த கெடுதிவிளைப்பவர்களாயிருப்பதினாற்றான் "எந்த மனிதனால் இடறல் வருகிறதோ, அவனுக்கு ஐயோகேடாம். அவன் கழுத்திலே திரிகைக்கல்லைக் கட்டி ஆழிச் சமுத்திரத்தில் அவன் அமிழ்த்தப்படுவது அவனுக்கு நலமாம்" (மத். 18: 7.6.)என்பதுதேவவாக்கு. இப்படிப்பட்டவர்கள்தப்பியொட்டிநீந்திக்கரைசேர்ந்து உயிர்வாழாதபடி அவர்களைக் கல்லோடு கல்லாய்ச் சேர்த்துக்கட்டித் துடிக்கப் பதைக்கத் தூக்கிக்கொண்டு போய் நடுச்சமுத்திரத்தில் புதைக்க வேண்டுமாம். என்ன, பயங்கர தீர்வை! பலவிதமான துன்மாதிரிகைக் காரரில் ஆத்துமங்களுக்கு மிகவும் அபாயகரமான துன்மாதிரிகைக்காரர், கற்புக்கு விரோதமான காமாதுரர்களேயன்றி வேறுயாருமன்று. இவர்கள் பாம்புக்குச் சமானமானவர்கள். பாம்பைக் கண்டு ஓடுவதுபோல் கற்புநெறியுள்ளோர் இவர்களைக்கண்டு ஓட்டமெடுக்க வேண்டுமென்று தூய ஆவியானவர் நம்மெல்லோரையும் வேதத்தில் எச்சரித்திருக்கின்றார். எனவே, இந்தஇனத்தைச்சேர்ந்த துன்மாதிரிகைகாரரைப் பற்றியே இங்குநாம் சிறிது ஆராய்தல் நன்மைபயக்குமென நம்புகின்றோம்.

இதுவிஷயமாய் நமது அனுபவத்தில் நாம்கண்டதையும், கேட்டதையும் உள்ளதை உள்ளபடியே எழுதப்புகின் சிலரின் கோபத்துக்கும், சீற்றத்துக்கும் உள்ளாவோமென்பதை நன்கறிவோம். ஆனால், அவர்களின் நன்மையையும், திருத்தத்தையும், ஏனையோரின் ஆன்ம ஈடேற்றத்தையுங் கருதி எழுதப்போவதால் நம்மை மன்னித்தருளுமாறு அவர்களை வேண்டுகிறோம்.

(வளரும்)

---

● ஐக்கிய அமெரிக்க தேச வோர்செஸ்றர் நகரிலே சென்வின்சென்ற் டீ போல் சபை அங்கத்தவர்களான 75பேர் அன்று ஓர்கூட்டமாகச்சென்று அங்குள்ள சென்வின்சென்ற்ஆஸ்பத்திரியின் இரத்தவங்கிக்கு இரத்ததானம் செய்யலானார்கள். ஒரேநாளில் அந்தஇரத்த வங்கிக்கு என்றுவதுஇரத்ததானஞ் செய்த மிகப்பெருங்குழு இதுவாகும். அன்றுகொடுபட்ட இரத்தம் அத்துணை அதிகமாயிருந்தமையாலே மற்றும்20 வின்சென்ற்டீபோல்சபை அங்கத்தவர்களை மற்றோர்நாளைக்கு வருப்படி கேட்டுக்கொள்ளவேண்டிய அவசியம்ஏற்படலாயிற்று.

● இங்கிலாந்திலே லன்காஷயரைச்சேர்ந்த வறிங்ரன் நகரிலுள்ள அர்ச். அல்பான்கோவில் உதவிக்குரவரும், ஆசீர்வாதப்பர்சபைச் சந்நியாசருமான வண. தொம்பீற்றர் ஜில்பேசுவாமியாரின்தாயார் இவ்வருடஆரம்பத்திலே மரணமாயினார். அதனால், சுவாமியாரே ஹறோடனின் பறோன் வோகஸ் பிரபுவாகிப் பிரித்தானிய பாராளுமன்றத்திலே பிரபுக்கள்சபையில் ஓர்ஸ்தானத்துக்கும் உரிமையுடையவராயினார். ஆனால், இவர் அம்பிள்போர்த் ஆச்சிரமத்தின் சந்நியாசராகவே, சிரேஷ்டர்களின் ஆலோசனையைக் கேட்டுத்தான் தமது ஸ்தானத்தை வகிக்கும்விஷயமாய் முடிவுசெய்யவிருக்கின்றார்.

## இல்லறசேவைக்கு ஏற்றம் பொருளாதார முன்னேற்றம் சமூக சீர்திருத்தம் கற்பிக்கும் "கத்தோலிக்கு சேவை"

— மாதம் இருமுறை —

சந்தா ரூபா 3-50

விபரங்களுக்கு:

Mr. A. C. Silveira,
Treasurer,
Legion of Mary,
181, Bankshall Street, Colombo-11.

## திரு. ஏ. பிலிப் தம்பையா அவர்களின் தேகவியோகம்

பலராலும் நன்கறியப்பட்டவராய், உயர்ந்தபண்புகள் உடையவராய் விளங்கியிருந்த திரு. ஏ. பிலிப் தம்பையா அவர்கள் சிலகாலமாக நோயினால் வருந்தி இம்மாதம் 2-ந்திகதி காலஞ்செல்லராயினாரென்னுந் துயரசெய்தி பலரையும் துயரத்திலாழ்த்தியது. மரிக்கும்போது இவருக்கு இவருக்கு வயது 68. இவர் தமதுசீவிய காலத்தில் பொதுமக்களின் நன்மையை விரும்பி ஆற்றியுள்ள தொண்டுகள் பலவாகும். நாவன்மையும், நீதிநியாயம் எடுத்துரைக்கும் ஆற்றலும் மிகுந்தவர். இவரின் ஏகபுத்திரன் திரு. இம்மனுவேல் இலங்கைநேசன், றெயில்வேயில் உத்தியோகம் வகித்திருக்கின்றார். புத்திரிகள் ஐவர்உள்ளனர்.

மறுநாட்காலை திரளானசுற்றத்தவர்கள், அன்பர்கள், மற்றும் பிரமுகர்கள் கூடியிருந்தசமுகத்திலே ஆசனக்கோவில் கட்டளைக்குரவர் துக்கசங்கீதம்பாடிச்சென்று முந்தக்கோவிலிலும்,பிந்தச்சேமக்காலையிலும் கடைசிஆசீர்வாதம்அருள நல்லடக்கஞ் செய்யப்படலாயிற்று. இவரைஇழந்து துன்புறும் மனைவி, புத்திரன், புத்திரிகள், மற்றுமுள்ளோருடன் நாமும் அநுதாபப்படுகிறோம்.

R. I. P.

## புனிதவதி மரியகொறெற்றி தினம்

ஆவணிமதி 6-ந்திகதிசனிவாரம். நீலவானத்தில் ஆதவன் உதயகிரணம்பரப்பிக்கொண்டிருந் தான். ஞானப்புத்துயிர் பெற்றுவரும் புத்தளநகரின் ஆலயமணிகள் ஆர்ப்பரித்தன. என்றுமில்லா ஆனந்தத்துடன் மாணவர்கள் கூட்டங்கூட்டமாக ஆலயம்சென்றனர். அங்கே அழகுபொலிய அலங்கரிக்கப்பெற்றிருந்த புனிதவதிமரியகொறெற்றியின்படம் சிறுவர்சிறுமிகளை வரவேற்கும்பாவனையாகக் காட்சியளித்தது. எங்கும்அமைதி. தனிமையாகவும், கூட்டமாகவும் ஆழ்ந்தவணக்கம்செலுத்தப்பட்டது. 7-30மணிக்கு உதவிக்குரவர் வண. கெனத்சுவாமியவர்களால் திவ்வியபூசை ஆரம்பமானது. பூசையின்போது வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் பசுமரத்தாணிபோன்று மனதில்பதியத்தகுந்த முறையிலே அரியபிரசங்கம்ஒன்று செய்தார். பூசையின்பின் நடைபெற்ற சுற்றுப்பிரகாரத்தின்போது தமிழிலும், சிங்களத்திலும் இனியகீதங்கள் இசைத்து, புனிதவதி மரியகொறெற்றியை எல்லோரும் மனமாரவாழ்த்தினார்கள். சுற்றுப்பிரகாரம் ஆலயத்தைஅடைந்தது திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதம் முடிந்தபின் புனிதவதியின் திருப்பண்டத்தை எல்லோரும் முத்திசெய்தனர். கோயிலைச்சந்திப்போரின் வணக்கத்துக்காக அத்திருப்பண்டபேழை வெளிப்பீடத்தில் பூச்சியமாக வைக்கப்பட்டிருந்தது. மாயவாழ்வில் மக்கள்சிக்காதிருக்க மாசற்றமங்கைமரியகொறெற்றியின் அருள்கிடைப்பதாக.

— நிருபர்

---

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, September 18-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org